சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7 | இதழ்: 03 | ஆகஸ்ட் - 2025 | விலை - ரூ.20/-

VOL:7 | ISSUE: 03 | August - 2025 | Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-3 ஆகஸ்ட்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

நீ வாழ்க்கையில் கஷ்டப்படுவதற்கு காரணமே நீ எடுத்த அவசர முடிவுகளால் தான் என்பதை உணர்ந்து கொள்! இனியாவது அவசரப்படாமல் நிதானமாக நம் வாழ்க்கைக்கு இது சாத்தியமா, சாத்தியமில்லையா, பொருந்துமா, பொருந்தாதா, என்று ஒன்றுக்கு நூறு முறை யோசித்து செயல்படு!

அதன் பிறகு இது தான் என் முடிவு என தீர்க்கமாக அதில் நிலைத்து நில், எப்போ தும் குழப்பத்தில் இருக்கும் மனநிலை என்பது மிகவும் ஆபத்தானது. முடிவு எடுப்பதில் குழப்பம் என்பது உனக்கு நீயே அறியாமை என்னும் வலையில் மாட்டி கொள்வதற்கு சமம். அது எப்போதும் உன்னை சிக்கலில் மாட்டிவிடும்.

கடந்துபோன கஷ்டகாலத்தையே நினைத்து கொண்டு உன் நிம்மதியை இழக்கவேண்டாம். எப்படி சந்தோஷம் அதிகநாள் நீடித்து நிற்க முடியாமல் ஓர் நாள் மறைந்து விடுகின்றதோ, அதைப்போல் கஷ்டமும் ஒரு நாள் மறைந்துவிடும். அதுவரை என்னை நினைத்துக்கொண்டு பொறுமையாக இரு.

இவ்வுலகில் யார் உனக்கென்று இருப்பார்களோ இல்லையோ நான் இருப்பேன், ஒருபோதும் பின்னோக்கி சிந்திக்காதே! இனி எல்லாம் உனக்கு முன்னேற்றமே? உன் மனதில் நான் அமர்ந்துவிட்டேன், இனி மேல் அது தான் என் இடம். கவலைப் படாதே! விரைவில்

நீ எதிர்பார்த்த முன்னேற்றங்களை உன்னிடம் கொண்டுவந்து சேர்ப்பேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் பேரருளால் எண்பத்து ஐந்தாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற இதழின் வெளியீட்டு விழா, 06.07.2025 ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக, நமது ஆசிரியர் அவர்கள் இயற்றிய ஆத்மஞான பாடலை, செல்வி. அமிர்தா, அட்சயா ஆகியோர் பாடினர். நிகழ்ச்சியை திரு. பிரபு தொகுத்து வழங்கினார். இம்மாத இதழை பாராயணப்பகலவன் திரு. சுந்தர் சாய் அவர்கள் வெளியிட, சாயி அர்ச்சகர் திரு. சேகர் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

திரு. சுந்தர்சாய், திருமதி. மாதங்கி பாலாஜி, திரு. லெட்சுமணன், திரு அகஸ்டின், திருமதி. தனம் அகஸ்டின், திரு. கருணாமூர்த்தி, ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டனர். திரு. வெங்கடேசன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். ஆத்மஞானியர் அனைவரும் இணைந்து ஆசிரியருக்கு குரு காணிக்கை அளித்து மரியாதை செய்தனர். ஆத்மஞானியரின்



அன்னதான குழுவினர் வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.

இம்மாத இதழ் எட்டாவது ஆண்டு துவக்கவிழா மலராக மலர்ந்திருக்கின்றது. இம்மலர் பல்வேறு காலகட்டங்களில், பலவித சோதனைகளை கடந்து பகவான் சாயிநாதரின் அருளாலும், உங்களது ஏகோபித்த ஆதரவினாலும், கடந்த ஏழு ஆண்டுகளாக, தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இதழின் சந்தாதாரர்கள் 300 நபர்களைத் தவிர மற்றவர்களிடம் நாங்கள் இதழுக்கென்று பணம் வாங்குவதில்லை. தமிழகம் முழுவதும் உள்ள சாயி ஆலயங்களுக்கு பல்லாயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாகவே அனுப்பி வைக்கப்படுகின்றன. தொடர்ந்து இதழ் வெளிவருவதற்கு பகவான் சாயிநாதரே முழுக்காரணம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதற்காக எந்த விதமான பிரதிபலனும் எதிர் பார்க்காமல் தொடர்ந்து நிதியுதவி செய்துவரும் பரந்த உள்ளம் உடைய சாயி நேசர் களுக்கும், தங்களால் முடிந்த நன்கொடை அளித்துவரும் சாயி பக்தர்களுக்கும், இதழை அனைத்து சாயி பக்தர்களிடமும் கொண்டு



சேர்க்கும் சாயி சேவகர்களுக்கும், ஒவ்வொரு மாதமும் புத்தக வெளியீட்டை சிறப்புற நடத்திவரும் ஆத்மஞானியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாயி சேவை செய்துவரும் நமது இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று நினைக்கும் சாயி அன்பர்கள் தங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பி உதவலாம். இல்லையெனில் முடிந்த சந்தாதாரர்களை இணைத்து நீங்களும் சாயி சேவையில் பங்கு பெறலாம் என் அன்புடன் அழைக்கின்றோம்.



பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மன நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

●

உன்னைப் புறக்கணித்துவிட்டதாக ஏன் கதறுகிறாய். யார் உன்னைப் புறக்கணித்தால் என்ன? இந்தப் பிரபஞ்சம் எப்போதும் உன்னைத் தன் அன்பால், கருணையால் அரவணைத்துக் கொண்டுள்ளது. சூரியனோ, சந்திரனோ என்றாவது உன்னைப் புறக்கணித்துத் தன் ஒளியை உனக்குத்தர மறுத்ததுண்டா?



யார் உன்னை புறக்கணித்தார்கள்

இயற்கை உன்னை ஒருபோதும் புறக்கணிப்பதில்லை. உன் மீது எல்லையில்லா கருணை கொண்டிருக்கும் இயற்கையை மறந்து நீ மனிதர்களின் புறக்கணிப்பு குறித்து கவலை கொள்கிறாய். உண்மையில் புறக்கணிப்பு குறித்துச் சற்று ஆராய்ந்து பாரேன். அது மனதின் வேலை. உண்மையில் எத்தனையோ மனிதர்கள் உன்னைப் புறக்கணிப்பதுண்டு. நீயும் எத்தனையோ மனிதர்களைப் புறக்கணிப்பதுண்டு.

எல்லாப் புறக்கணிப்புகளும் உனக்கு வலியைத் தருவதில்லை. சில மனிதர்களை மனம் கூழாங்கற்களாக நினைக்கிறது. சில மனிதர்களை மனம் விலையுயர்ந்த வைரம் போல் மிக உயர்வாக நினைக்கிறது. அவர்களின் அன்பிற்கும், அங்கீகாரத்திற்குமாய் ஏங்குகிறது.

கூழாங்கற்களின் புறக்கணிப்பு வலியைத் தருவதில்லை. வைரத்தின் புறக்கணிப்பு வலியைத் தருகிறது. இது மனதின் "உயர்வு தாழ்வு மனப்பான்மை" என்ற குணத்தினால் விளைவது.


அந்த மனப்பான்மையினால் பிறரை உயர்வாகக் கருதும்போது உன்னை நீயே தாழ்வாகக் கருதுகிறாய். பிறரைத் தாழ்வாகக் கருதும்போது உன்னை நீயே உயர்வாகக் கருதிக்கொள்கிறாய்.

உன்னை நீ தாழ்வாகக் கருதும் தருணத்தில் வரும் புறக்கணிப்பு வலியைத் தருகிறது. உன்னை உயர்வாகக் கருதும் தருணத்தில் வரும் புறக்கணிப்பை வலியில்லாமல் உன்னால் கடந்து செல்ல முடிகிறது. இவையனைத்தும் உன் மனதின் கற்பனையான நிலைப்பாடுகளே யன்றி உண்மையில் இயற்கையில் அத்தகைய உயர்வுதாழ்வு ஏதுமில்லை.

சிறு புல்லும், பெருஞ்சூரியனும் இயற்கையில் சமமாகவே உள்ளன. ஆக இப்போது உனக்குத் தேவை சமநோக்குப் பார்வை. தியானம் செய். இயற்கையை நேசி.வலிகள் மறையும். பாராட்டுக்காக ஏங்கும் நேரத்தில் நீ எத்தனை பேரை பாராட்ட மறந்திருக்கிறாய் என்று எண்ணி பார்.

இது இயல்பே என எண்ணு. வேகமாக சென்று கொண்டு இருக்கும் போது பார்க்கும் இயற்கை அழகை நின்று பார்க்க நேரம் இருப்பதில்லை. அதற்காக இயற்கை தம் அழகை குறைத்து கொள்வதில்லை. அது இயல்பாய் இருக்கிறது. அது போல் இயல்பாய் கடமையைச் செய். ●

குரு வாழ்க! குருவே துணை! குருவின்றி வேறில்லை குறையேதும் எமக்கில்லை. சமர்த்த சத்குரு சாய் மகராஜ் பொற்பாதம் பணிந்து, சாய் சொந்தங்களை கரம் கூப்பி வணங்கி தொடர்கிறேன். சென்ற இதழில் நாம் முதல் முறையாக இலங்கை சென்று சாய்நாதன் சரணாலயத்தில் நடைபெற்ற சாய் சத்சரித சப்த சப்தாகம் பூர்த்தி விழா மற்றும் ஹோமத்தில் கலந்து கொண்ட அனுபவத்தை அறிந்தோம்.




தொடர் - 26

திருவருள் தேடி

அதில் அடுத்த கட்டமாக நடந்த அற்புதமாக, நீ எந்த திட்டமுமின்றி,முன்னறிவிப்புமின்றி அடுத்த நாளே ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவின் பாதுகைகள் இந்தியாவிலிருந்து சாய் தர்பாரிலிருந்த பக்தர் நானா சாஹேப் நிமோண்கரின் பேரன் மூலமாக ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு வர இருப்பதாக ஒரு தகவல் வெளிவந்தது. ஆகா! என்ன ஒரு பாக்யம். சாய் பாபாவின் சமகாலத்தில் வாழ்ந்த நிமோண்கருக்கு பாபாவின் பாதுகைகள் கிடைக்கப் பெற்று அதை நாமும் தரிசனம் செய்ய ஓர் அரிய வாய்ப்பாக அமைந்ததை எண்ணி உணர்ச்சிப் பெருக்கால் உந்தப்பெற்றோம்.

என் உடன் வந்த சாய் பக்தரும் உடனே தனது முடிவை மாற்றிக் கொண்டு கொழும்பிலேயே சாய் ஆலயத்தில் மறுநாள் பாதுகா தரிசனம் செய்ய ஆவலாய் இருந்தார். மேலும் அவரும் ஹிந்தி மொழியில் சரளமாக பேசக்கூடிய வராக இருந்ததால் மஹாராஷ்டிராவில் இருந்து வந்தவர்களுடன் உரையாடி தமிழில் மொழிபெயர்ப்பு செய்ய வசதியாய் அமைந்தது.



சுந்தர் சாய்
9789404451

அவர்கள் விவரங்களை எடுத்துச் சொல்ல சொல்ல, தமிழில் இலங்கை சொந்தங்க ளுக்கு பாபாவின் பாதுகைகள் கிடைத்த விதம், உலகெங்கும் பாபா பாதுகைகள் சாய்நாதரின் கொட்டாஞ்சேனை சரணாலயத்தில், வைக்கப்பட்டு பஜனை, நாம ஜெபம், பாராயணம், ஆரத்தி, அர்ச்சனை என மீண்டும் ஓர் நாள் உத்சவக் களையில், ஆனந்தமாக ஆலயம் ஆரவாரத்தில் மூழ்கியது.

ஷீரடி சாயியே சாயிநாதன் சரணாலயத்தில் வந்தமர்ந்ததை அறிவிக்கும் முகமாக சிறிதும் எதிர்பாராமல் பாபாவின் பாதுகைகள் வந்திருந்து ஆசிர்வதித்த அற்புதம் இலங்கை நாட்டையே ஆன்மீக அலைகளால் அதிரச் செய்தது. இதைவிட பாபாவின் அன்பிற்கும், கருணைக்கும் வேறு சாட்சி என்ன வேண்டும். இவைகளைக் காண கண் கோடியும் அனுபவிக்க ஆயுளும் கிடைத்ததே நமக்கு மிக்க மகிழ்வை தந்தது.

இவ்வாறாக நமது ஆன்மீகப் பயணத்தில் இலங்கையிலும் நமது பூர்வ ஜென்ம சொந்தங்களால் ஈர்க்கப்பட்டு இன்றளவும் நமது இலங்கை பயணம் தொடர்வதுடன், பல முன்னேற்றங்கள் நாம் திட்ட மிடாமலே நடப்பது குருவருள் சங்கல்பமே எனத் தெளிவாகிறது. இந்த திருவருள் தேடி எனும் தொடரை ஷீரடியில் எழுத ஆரம்பிக்க உத்தரவு கிடைத்ததி லிருந்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அகத் தூண்டுதலாய் பல விஷயங்கள் நடந்து கொண்டிருப்பது நமக்கு ஓர் ஆச்சரியத்தை அளிக்கிறது.

அவ்வாறே, இந்த இதழிலும் எழுத ஆரம்பித்து முதல் இலங்கை பயணம் வரை எழுதிய பின் ஒரு சிறிய இடைவெளி விட்டு, விஷயங் களை நினைவிற்கு கொண்டு வந்தபின் எழுதலாம் என எண்ணிய வேளையில், வியாழனன்று குளியல் முடிந்து வெளிவரும் நேரம் ஓர் உள்ளிருந்து வழிநடத்தும் எண்ணத் தூண்டுதலாய், சில வருடங்கள் கடந்து நடந்த ஓர் சம்பவத்தை இத்துடன் இணைத்தே பகிர்கிறேன்.

ஏனென்றால் இவையெல்லாம் ஒரே படிவம் (Pattern) உள் அடங்குவதால்.

சில வருடங்களுக்கு முன்பிலி ருந்து ஷீரடி சாய் சமஸ்தானத் திலிருந்து ஓர் ஆன்மீக பயணத்தை திட்டமிட்டு, பாபாவின் பாதுகை களை சமஸ்தானுடைய பூஜாரிகள் சகிதமாக அனைத்திந்திய முக்கிய இடங்களுக்கு ஒரு ஊர்வல மாய்க் கொண்டுவந்து பக்தர் களின் தரிசனத்திற்கு வைக்க ஆரம்பித்திருப்பது நம்மில் பலரும் அறிந்த விஷயம் தான்.

இன்றளவும் அதுபோன்று சமஸ்தானமே ஏற்பாடு செய்து கொண்டிருப்பதை நாம் அறி கின்றோம். அவ்வாறாக நானறிந்த வகையில் இந்த முதல் ஷீரடி சமஸ்தானத்தால் ஏற்பாடு செய் யப்பட்டு சென்னை மயிலாப்பூரில் உள்ள பாபா ஆலயத்தில் தரிசனத் திற்காக வைக்கப்பட்டது. பக்தர்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. நம்மால் அந்த தரிசன நெரிசலில் சென்று வணங்க முடியாமல் போனது.

சிறிது மன வருத்தத்துடன், இன்றோடு பாதுகா தரிசனமும் முடிந்துவிட்டது நாமும் சென்று தரிசிக்க முடியவில்லையே என எண்ணியபடியே உறங்கச் சென்று விட்டேன். மறுநாள் காலை எழுந்து காலைக் கடன்களை முடித்து பாபா படத்தின் முன் நின்று வணங்கும் பொழுது அந்த அனுகிரகம் நிகழ்ந்தது. நமது மனதைப் படித்த சத்குரு தனது வேலையைத் தொடங்கி வைத்தார்.

ஆம், அலைப்பேசி அழைப்பில் 'சாய்ராம் உங்களால் 45 நிமிடத்தில் திருவான்மியூர் பஸ் நிலையம் வரமுடியுமா? எங்களது வண்டியில் ஒருவருக்கு மட்டும் இடம் உள்ளது. பாபா பாதுகை ஷீரடி சமஸ்தான பேருந்தில் சென்னையிலிருந்து பாண்டிச்சேரி செல்லும் வழியில் ஸ்ரீ ரமணி சாய்ராம் கோவில், கிருஷ்ணகரணைக்கு வருகிறது. நாம் வரவேற்பு குழுவில் கலந்து கொண்டு தரிசனம் செய்யலாம்' இந்த அன்பை, என்னவென்று உணர்வது? நாம் யாரிடமும் கேட்க வுமில்லை, தரிசிக்க இயலவில்லை என வருந்தவுமில்லை. நமக்கும் சாயிக்கும் மனதளவில் நடந்த உரையாடல் தான்.

வேறு சிந்தனை ஏதுமின்றி விறுவிறுவென திருவான்மியூர் சென்று வேன் வரவை எதிர்பார்த்தேன். மறைந்த எனது நண்பர் திரு.சிவனேசன் தனது பக்தர் குழுவுடன் வந்து என்னையும் ஏற்றிக்கொண்டு பட்டிபுலம், கிருஷ்ணன் கரணையில் உள்ள ஸ்ரீ ரமணி சாய்ராமின் பாபா ஆலயத்திற்கு அழைத்துச் சென்று அதிசயிக்க வைத்தார்.

நாங்கள் வரிசையாக மேள வாத்தியங்களுடன் பாபாவின் பாதுகைக்காக காத்திருந்தோம். நாம கோஷம், பஜன், மேளம் என விழாக் கோலம் நம்மை வேறு உலக்திற்கே அழைத்துச் சென்றது. எதிர்பார்த்ததை விட இன்பமான அனுபவம் யார் அளித்த ஆசிர்வாதம்? எப்படி நிகழ்கிறது இவையெல்லாம், குரு வருளின் கருணையின்றி திருவருள் துணையின்றி நிகழுமா? இந்த அனுபவத்திற்கு முத்தாய்ப்பு



என்னவென்று தெரியுமா? செய்தி பரவி 500 க்கும் மேற்பட்டு பக்தர் கூட்டம் அலைமோத ஆரம்பித்தது.

சாய் பாதுகையுடன் சமஸ்தான் பேருந்து உள்ளே நுழைந்தவுடன் கூட்டம் எங்கிருந்து வந்தது என புரியாத புதிராய் நீண்ட வரிசை. நமக்கு போட்டி போட்டுக் கொண்டு முன்னேறத் தெரிய வில்லை. பாதுகை வழிபாடு ஆரத்தி எல்லாம் முடிந்து தரிசனம் தொடங்கியபொழுது நாம் மிகவும் பின்தங்கியிருப்பது புரிந்தது. தரிசனம் முடிந்து வெளியேறும் வழியாகச் சென்று நோக்கும் பொழுது பாதுகை அருகில் நமக்குப் பரிச்சயமான சமஸ்தான பூஜாரி அமர்ந்திருப்பதை உணர்ந்தேன்.

ஆனால் அவருக்கு என்னை நினைவிருக்க வழியில்லையே. கொழும்புவில் இருந்த பொழுது நானா சாஹேப் பேரனுடன் அவர் வந்திருந்தது என் நினைவிற்கு வர, உடனே என் கைபேசியில் படங்களைத் தேடினேன். நாங்கள் அங்கே அமர்ந்து எடுத்துக் கொண்ட போட்டாவை மொபைலுடன் அவருக்கு அனுப்பினேன். அவர் அதைக் கண்டவுடனேயே அடை யாளம் தெரிந்து என்னை முன்னே வரச்சொல்லி அருகே இருந்து தரிசனம் செய்து வைத்தார். எனவே இதுவும் இலங்கை பாதுகை தரிசனத்துடன் ஏற்பட்ட தொடர்பு என்பதால் பகிர்ந்து கொள்ள ஓர் உந்துதல் ஏற்பட்டது.

இது போன்ற பல அனுபவங்கள் இன்றளவும் தொடர்ந்து கொண்டி ருப்பது நம் வாழ்வில் ஓர் அசைக்க முடியாத சக்தியாக சத்குரு சாய் மகராஜ் நம்மை வழிநடத்திக் கொண்டிருப்பதை தெளிவாக உணர்த்துகிறது. சாய் என் வாழ்க்கை உன்னோடுதான் மாத இதழ் நடத்தி, வெளியீட்டு விழாவும் நடந்து வந்த சமயம் திரு. சிவனேசன் சாய்ராமிடம் தொடர்பு ஏற்பட்டு அவ்விழாக்களுக்கும் செல்ல ஆரம்பித்த பொழுது, அங்கே நமக்கு அறிமுகமான முக்கி யமான சாய் அன்பர்கள் பலர்.

அவர்களுக்குள் குறிப்பிடத்தக்க நட்பு கலியன் சாய்ராம அவர்கள், சிம்மக்குரல் சாயி பாடகர் சந்திரன், குருவருள் வேண்டி அசோக் குமார், பெரியவர் திரு. கோபால், நங்க நல்லூர் வேணுகோபால் சாய்ராம், உதி மூர்த்தி என வரிசை நீண்டு கொண்டே போகும். கொளத்தூர் சுமதி சாய்ராம், ஜெய லட்சுமி சாய்ராம் என இன்றும் நம்முடன் சாய் சேவையில் தொடர்பில் இருப்பவர்கள் ஏராளம். அவர் களையும் அடிக்கடி சந்திக்கிறேன்.

அங்குதான் முதன்முதலாக சீரடிவாசி அச்சுதானந்த சுவாமிகள், சாய் பாத மெய்யடிமை ஆகியவர்களையும் சந்தித்து ஆசி பெற்றேன். அந்த வெளியீட்டு விழாவில் சந்தித்து மிக நெருங்கிய சாய் அன்பராக இன்றளவும் திகழ்ந்து கொண்டிருப்பது நமது 'ஸ்ரீராம் பாபா' என அறியப்படும் இந்நூலாசிரியர் குண்டலினி யோகி ஸ்ரீராம் அவர்கள்.

சுமார் பத்தாண்டுகளுக்கு மேல் அவரோடு தொடர்ந்து பயணம் செய்வதுடன் அவர் மூலம் சாய் தியானாலயாவைச் சேர்ந்த உங்களனைவரையும் மற்றும் சாய் மகராஜ் குருவைத் தேடி வாசகர்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. 'ஸ்ரீராம்' மாக அறிமுகப்படுத்தப்பட்டு, கூட்டுப் பிரார்த்தனை செய்தவராக பார்த்த அவர் ஓர் புதிய மாத இதழை சாய் சேவையாக தொடங்க இருக்கிறார் எனத் தெரிந்துகொண்டேன்.

நாமும் இந்த சேவையில் ஓர் பங்களிப்பாளராக இல்லாவிட்டாலும், ஆதரவாளனாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் ஒவ்வொரு மாதமும் நூல் வெளியீட்டு விழாவில் பங்கு கொள்ள ஆரம்பித்தேன். பின்னர் அது ஓர் நெருக்கமான, காலங்களை கடந்து தொடரும் நட்பாக கனிந்து வருவதை சாய் மகராஜின் சங்கல்பமே என உணர பல அனுபவங்கள் கிடைத்து இன்றும் தொடர்கிறது. அதை விவரமாக பின்வரும் இதழ்களில் விவரிக்கிறேன்.

நமது ஷீரடி பயணங்கள் மாதம் ஒருமுறை என்ற முறையில் நம்மை பாபாவிடம் நெருக்கமாக செல்ல வைத்து மேன்மேலும் பக்தர்களின் பாபாவின் அற்புத வாழ்க்கை அனுபவங்களைத் தேடி தேடி அறிந்து கொள்ள நம் வாழ்விலும் "சாய் என் வாழ்வு உன்னோடுதான்" என்றும் பிரார்த்தனை செம்மல் கலியன் ஐயா எழுதுவது போல் - LOVE SAI, LIVE IN SAI என ஆரம்பித்து, பயணித்து அடைய வேண்டிய ஸ்திதி "MERGE WITH SAI" என்றளவில் ஓர் இருப்புக் கொள்ளாமையை உணர ஆரம்பித்தேன்.

இதற்கிடையில் நமது குடும்ப சூழ்நிலைகளை சமன் செய்தால் மட்டுமே இது சாத்தியம் என்பது ஓரளவு தீர்க்கமாகப் புரிந்தது. அதை நான் முழு நம்பிக்கையுடன் சத்குருவின் பாதத்தில் சமர்ப்பித்தேன். எண்ணிப் பார்க்க இயலாத அளவிற்கு அதற்கான சூழ்நிலைகளை நமது சாய் அமைத்து கொடுக்கவே, களமும், பயணமும் விறுவிறுப்பாகியது. இது போன்று ஓர் இணக்கமான சூழ்நிலையை அமைக்க சத்குருவால் மட்டுமே இயலும். அன்று முதல் இன்று வரை நமது முழு கவனமுமே சாய் பக்தி, சத்குரு சேவா என தொடர்வது ஓர் கிடைத்தற்கரிய ஆசிர்வாதமே.

ஷீரடி பயணத்துடன், ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சமஸ்தானம் பிடாபுரம், கானுகாபுரம், அக்கல்கோட் ஸ்ரீ சுவாமி சமர்த்தர் தரிசனம், ஸ்ரீ பாதர் தர்பார் நடத்திய குருவபுரம் என குருவின் புண்ணிய ஸ்தலங்களுக்கு குரு பந்துக்களுடன் பயணம் சென்று மகிழ்ந்தேன். அந்த சமயத்தில் கஜானன் மஹராஜ் சரிதத்தை தமிழில்

மொழிபெயர்த்த சாய் சகோதரி திருமதி. ரமா சுப்பிரமணியன் அவர்களுடன் 'சேவ்காங்' (SHEGAON) என்றழைக்கப்படும் "சிவன் வாசஸ்தலம்" எனப்படும் கஜானன் மஹராஜ் சமாதி மந்திர் சென்று வர ஓர் வாய்ப்பு கிட்டியது.

அதே போன்று "மாணிக்க பிரபு" மஹராஜ் சரிதத்தையும் படிக்க ஆர்வம் அதிகரித்தது. தத்தாத்ரேயர், இறைவனே குருவாக அவதாரம் செய்ததுடன்,வெவ்வேறு காலகட்டங்களிலும், விதவிதமாக தன்னை மீண்டும் மீண்டும் தோற்றுவித்துக் கொண்டு கலியுகத்தில் முதல் அவதாரமாக ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர், பின் ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி (கானகாபூர்) மூன்றாவதாக அக்கல்கோட்டில் "ஸ்ரீ சுவாமி சமர்த்தர்", நான்காவதாக ஸ்ரீ மாணிக்க பிரபு மஹராஜ் (மாணிக் நகர்) குல்பர்கா அருகில், பின்னர் ஐந்தாவதாக ஷீரடியில் சாய்நாத் மஹராஜ் என எல்லா அவதாரங்களையும் பற்றித் தெரிந்து அனுபவிக்க ஆர்வம் மிகுந்தது.

குரு சரித்திரத்தில் வருவது போன்று எவர் ஒருவருக்கு குரு சரித்திரங்களில் ஆர்வம் துளிர்க்கிறபோது அவருக்கு தேவையான வழிகாட்டுதலை சத்குருவே நிறைவேற்றி வைப்பார் என்கிற பரம சத்தியமான வாக்கு நமது வாழ்விலும் நிரூபணமாயிற்று. இதைத் தொடர் இதழிலும் அறிந்து அனுபவிப்போம். குருபதம் பணிவோம் ஒரு குறையுமின்றி வாழ்வோம். குரு வாழ்க! குருவே எல்லாம் என குருவடியே திருவடி என உணர்ந்து போற்றிடுவோம். ●

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.06.25

குருவின் நாமமும், அன்மையும், அருளும், அருமையும், அவருடன் வசிக்கும் பாக்கியமும், குரு மந்திரமும் எவ்வளவோ முயற்சிகளுக்குப் பின் அடையக்கூடியவை. அதை குருவிற்கு சேவை செய்கிறேன் என்ற பெயரில் இழந்துவிடாதீர்கள். குருவிற்கு சேவையே குருவின் சொல்லுக்கு கீழ் படிதலே!

02.06.25

முடிவான உண்மை உங்கள் அருகாமையில் உள்ளது. அதுவே தெய்வீகம். அதை அனுபவமாக ஆக்காதவரை உங்களுக்கு பயன் படாது. எனவே அதை நம்பாதீர்கள். அனுபவமாக்குங்கள்.

03.06.25

உன்னைப் பார்த்து பொறாமைப் படுபவர்களை ஒருபோதும் வெறுத்துவிடாதே! அவர்களை விட நீ நன்றாக இருப்பதாக நினைக்கின்றார்களே, அதற்காக வாவது அவர்களுக்கு மரியாதை செய்வாயாக!

04.06.25

இறைவனின் கரங்களில் ஒரு கருவிபோல் ஆகிவிடுங்கள். அவன் விரும்பும் எந்த நோக்கத்திற்காகவும் அவன் உங்களை பயன்படுத்திக் கொள்ளட்டும்.

05.06.25

உண்மையில் மனம் என்பது ஆசையினால் உருவாக்கப்பட்டுள்ளது. நம்முடைய ஆசை நிறைவேற வேண்டும் என்பதற்காகவே நாம் இறைவனை வணங்குகிறோம். எப்போது இறைவனை வணங்குவதே நமது ஆசை என்று மாறுகின்றதோ அப்போதே நமக்கு மனம் என்பது இல்லாது போகும்.

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

06.06.25

நீங்கள் எதை சாதிக்க விரும்பினாலும், சரியான பாதையில் செல்வதின் மூலம் அதை அடையுங்கள். அதன் விளைவுகளை நீங்கள் எதிர்கொள்ள தயாராக இல்லை என்றால் தவறான பாதையில் செல்லாதீர்கள்!

07.06.25

மனிதர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய உன்னதமான பண்பு சகிப்புத்தன்மையாகும். எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும், சஞ்சலப்படாமல் மன்னிக்கும் மனப்பான்மையுடன் இருக்கும் சகிப்புத்தன்மையே அன்மீக சாதனையின் இதயமாகும்.

08.06.25

நீங்கள் அறிவாளி என்றால் பணம் உங்களுக்கு தொண்டு செய்யும். முட்டாள் என்றால் உங்களை அடிமைப் படுத்தி ஆட்சி செய்யும்.

09.06.25

எங்கும் நிறைந்த ஆன்மீக உடல் நம்மிடம் உள்ளது. ஆனால் அதைப் பார்க்க நம்மிடம் ஞானக்கண்கள் இல்லை. கண் பார்வை இல்லாதவர்கள் எப்படி தன் உடலை காண முடிவதில்லையோ, அதுபோன்றே ஞானக்கண் இல்லாதவர்கள் தன் ஆன்மீக உடலை காணமுடிவதில்லை.

10.06.25

இறைவனுக்கு தேங்காய் பழம் உங்களின் மயிர் இவற்றை காணிக்கை இடுவதை நிறுத்துங்கள் அதற்குப்பதில் உங்களது அப்பழுக்கற்ற அன்பையும், அசைக்கமுடியாத நம்பிக்கையையும் காணிக்கையாக இடுங்கள்.

11.06.25

நாம் பிறந்திருப்பது மறுபடி பிறக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து முடிப்பற்குத்தான். இறப்பதும் மறுபடி பிறக்காமல் இருப்பதற்குத்தான். நல்ல பிறவியைவிட நல்ல மரணத்தை விரும்புங்கள்.

12.06.25

நாளை மறையப்போகும் துன்பங்களையும், சிறிய ஆயுள் கொண்ட இன்பங்களையும் கண்டு சலனமடையாதீர்கள். அழியாத உறவான இறைவனை மறந்து தவறான வழியில் செல்வது அறிவாகுமா? என்றும் இருக்கும் இறைவனை அடையும் முயற்சியை இன்றே துவங்குங்கள்.

13.06.25

ஆன்மீக வழியில் நடப்பதைப் போன்று பிறருக்காக பாவனை செய்வது ஒருபோதும் தன்னையறிதல் ஆகாது. எனவே இறைவனுக்கு நீங்கள் வைக்கும் விண்ணப்பங்கள் உதட்டளவில் இல்லாது இதயத்தில் இருந்து இருக்கட்டும்.

14.06.25

தாகம் எடுக்கும்போது "தண்ணீர்" என்ற சொல் தாகம் தீர்க்குமா? அதேபோல் மரணம்

வரும்போது பரமாத்மா என்ற சொல் மரணத்தை தடுக்காது. ஏனெனில் பரமாத்மா என்ற சொல் பரமாத்மாவை உணர்த்தாது.

15.06.25

இங்கு ஒவ்வொருவரும் வேறு ஒருவரைப் போலவே இருக்க ஆசைப்படுகின்றார்கள். அது மட்டுமே இங்கு பிரட்சனை.

16.06.25

வாழ்க்கையை துக்கமானதாக ஆக்கிக் கொள்ளலாம். ஆனால் வாழ்க்கை துக்கமானதல்ல.

17.06.25

இளம் பிராயத்தில் செய்கின்ற தவறுகளே அனுபவ ஞானமாக உறுமாறுகின்றன. ஒரு சிலரைத் தவிர இங்கு யாரும் மகானாகப் பிறப்பதில்லை. உருவாக்கப் படுகின்றார்கள்.

18.06.25

இந்த அண்டம் முழுவதற்கும் அடிப்படை ஒன்றேதான் என் பதை உணருவதே உண்மை அறிவு. இவ்வறிவு இல்லாமல் அனைத் திலும் இரண்டு என்ற "நான், எனது" என்ற இருமை ஒழிந்தால்தான் எல்லாமுமாய் உள்ள இறையின் உணர்வு நமக்கு விளங்கும்.

19.06.25

இந்த உலகில் எதையும் அடைய முயற்சிக்காதே! வருத்தம் வரும். எதையும் அறிய முயற்சி செய். நிறைவு வரும்.

20.06.25

நல்ல குருவை தேர்ந்தெடுக்க முயலதே! அது முடியாது. நீ நல்ல சீடனாக மாறிக்கொள்.

21.06.25

உலக வாழ்வியலில் திறமை யோடு இருந்தால் ஞானம். இறைத்தன்மையில் திறமையோடு இருந்தால் அது மெய்ஞானம்.

22.06.25

உண்மையை உண்மையாக உணருபவர் மற்றவர்களைவிட மௌனியாக இருப்பர். மௌனம் அனுபவத்தின் கோடி.பணிவும், அமைதியும் மௌனத்தின் அறிகுறிகள்.

23.06.25


தியானம் என்பது சாதாரண மானதல்ல! சாதாரண விசயத்திற் காகவும் அல்ல. புலன்களில் நிகழ் வதல்ல தியானம். புலன்களுக்கு அப்பால் நிகழ்வதே தியானம்.

24.06.25

உறவுகள் சிதிலமடைய காரணம், பொறாமை, கோபம், தான் என்கின்ற அகங்காரம். இவை எல்லாம் நீங்குவதற்கு குரு எளிதாக உதவி செய்வார். அந்த உதவியினுடைய ஆரம்பம்தான் சரணாகதி. அதுவே அமைதி.

25.06.25

கண்ணாடி டம்ளரில் எதை ஊற்றுகின்றோமோ அது தான் வெளியே தெரியும். அதைப்



போலவே உங்கள் மனதில் கடவுள் இருந்தால் பார்க்கும் இடமெல்லாம் கடவுளே தெரிவார். சைத்தான் இருந்தால் சைத்தானே தெரிவார்.

26.06.25

விலை மதிப்பற்ற நேரத்தை, வம்பு பேச்சிலும், பிறரது நடத்தையை குறைகூறுவதிலும் ஏன் வீணடிக்க வேண்டும். பிறருக்கு எதிராக வன்மம், வெறுப்பு கோபத்தை வளர்த்துக் கொள்ளும் தீய செயல் ஒரு நாள் நம்மீதே திரும்ப வாய்ப்புள்ளதல்லவா?

27.06.25

மற்ற உறவுகளோடு என்ன குளறுபடிகள் ஏற்பட்டாலும், குரு என்கின்ற உறவை பலமாக இறுக்கிப் பிடித்துக்கொண்டால், அதுவே மிகப்பெரிய நிறைவைக் கொடுத்துவிடும். மற்ற உறவுகளோடு எப்படி உறவு வைத்துக் கொள்வது என்ற ஞானமும் ஏற்பட்டுவிடும்.

28.06.25

ஒருவரது பிரார்த்தனையின் நோக்கம் சரியில்லாத போது, அதன் விளைவாக சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கின்றது. தாங்கள் பிரார்த்தித்தது என்ன என்பதை அறியாமல் கடவுளை குறைகூறி பயன்ஒன்றும் இல்லை. எனவே எதற்காக, எப்படி பிரார்த்தனை செய்கின்றோம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

29.06.25

தவறுகளில் பெரும் தவறு நன்றிகாட்ட தவறுதல். அது பெரும் பாவம். பிறரிடம் இருந்து பலன் பெற்றவர்கள் நன்றி காட்டத்தான் வேண்டும். தன்னளவில் ஒருவரால் மற்றவர்களுக்கு நன்ற காட்ட இயலவில்லை என்றால் அவர் எப்படி இறைவனிடம் நன்றியோடு இருக்க முடியும்.

30.06.25

கற்றதை கடைப்பிடிப்பவனே உண்மையான பக்தனாக இருக்க முடியும்.மற்றவர்களின் பாராட்டை எதிர்பார்த்து காரியம் செய்வதில் ஒரு புண்ணியமும் இல்லை.செய்வது இறை காரியமாக இருந்தால் அடுத்தவரின் விமர்சனத்தை காதில் போட்டுக்கொள்ளாதே! ●

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்-17

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா

பகவான் சாயி தன்னிடம் வரும் அடியவர்களின் தகுதிகளை முதலில் கவனிக்கின்றார். பிறகு அவர்களுக்கு ஏற்றார் போல் அவர் களே அறியாவண்ணம் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தபின் ஆத்மானுபூதி என்ற லட்சியத்திற்கு அழைத்துச்செல்கின்றார்.

உடல்நலமில்லாத குழந்தைக்கு தாய் எப்படி கசப்பான மருந்தை கருணையில்லாமல் புகட்டுவாளோ அப்படி தமது அடியவர்களுக்கு அவர்களின் நலன் கருதி அறி வாற்றல் என்னும் கண்களை திறப்பதற்காக கடுமையான உபதேசங்களை பொழிகின்றார்.

அப்போது புலன் இன்பங்கள் நம்மை விட்டு மறைகின்றது. அதன் விளைவாக விவேகம், வைராக்கியம் என்னும் இரட்டைகனிகள் அடியவர்களுக்கு கிடைக்கின்றன.

இறைவன் நம்மிடம் வருவதற்கு அவர் அணியும் பிரகாசமான முகமூடியே குரு. குருவின் உதவியே இம்முன்னேற்றத்திற்கு காரணமாகும். எனவே நாம் எப்போதும் குருவையே பின்பற்றி அவரின் கதைகளை காதாரக்கேட்டு, அவரின் பாதத்தை பணிந்து





அவர்களின் கதையை கூறுகிறேன்.

பம்பாயில் ஓரளவு பிரபலமான வணிகராக இருந்த திரு. ஸாடே அவர்களின் வணிகம் பெருத்த நஷ்டமடைந்தது. இனி மீளவே முடியாது என்ற நிலை வந்ததும் திரு.ஸாடே மிகுந்த மன உளைச்சல் அடைந்தார். கவலைகளால் அவரது உடல் நிலையும் பாதித்தது. உள்ளமும் வெகுவாக சோர்ந்து போனது. எல்லாவற்றையும் துறந்து எங்காவது நிம்மதியாக போய் விடலாம் என்று முடிவெடுத்தார்.

பொதுவாக மனிதன் கடவுளை நினைப்பதில்லை. ஆபத்துக்களும், இடர்பாடுகளும் நேரும்போது மட்டுமே அவன் கடவுளை நினைத்துப் பார்ப்பான். அப்படி நேரும் பட்சத்தில் எல்லோருக்கும் கடவுள் அனுகிரகம் கிட்டுமா என்றால் இல்லை. எவனுடைய தீய கருமங்கள் முடிவுக்கு வந்ததோ அவனுக்கு மகான் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பினை இறைவன் தருகின்றார். அத்தகைய நல்ல வாய்ப்பு திரு. ஸாடே அவர்களுக்கு கிடைத்தது.

அவருக்கு சேவை செய்வதே நமது லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

சத்குரு நமக்கு வழங்கிய உபதேசங்களை அடுத்தவர்களிடம் கூறக்கூடாது. அப்படி கூறினால் அது பலிக்காது என்று சிலர் கூறுவர். ஆனால் அது தவறான கருத்தாகும். சத்குரு தனது அமிர்தமான மொழிகளை எல்லோருக்கும் பொதுவாகவே கூறுகிறார். அதை நாம் நமக்குத் தேவையான மட்டும் ஆழ்ந்து அறிந்துகொண்டு, தேவைப்படுவோருக்கும் வழங்கவேண்டும். இப்போது நான் உங்களுக்கு திரு. ஸாடே

அதே நேரத்தில் நாடெங்கும் இருந்து அநேக மக்கள் சீரடி என்னும் சிற்றூரில் அருள்பாலிக்கும் சாயிபாபாவை காண கூட்டம் கூட்டமாக செல்வதை அறிந்த அவரது நண்பர்கள் திரு.ஸாடேவை சீரடிக்குச் சென்று சாயி பாபாவை தரிசிக்கும்படி கூறினார்கள். ஸாடே உடனே அக்கருத்தை ஏற்றுக்கொண்டு 1917ஆம் ஆண்டு சீரடிக்கு சாயிபாபாவை தரிசிக்கச் சென்றார்.

சீரடிக்குச்சென்று துவாரகா மாயியில் சாந்தமான, களங்கமற்ற, சுய சோதியுமான சாயிபாபாவின் உருவத்தை கண்ட மறுவிநாடியே சலனமான அவரது மனம் அமைதி யானது. உள்ளம் இனம்புரியாத ஆனந்தத்தை அனுபவித்தது. அதுவரை அவருக்கிருந்த குழப்ப மான மனநிலை எங்கோ ஓடி ஒழிந்தது.

தமது முற்பிறவியின் செய்த நல்வினைகளின் ஒட்டுமொத்த குவியலே தம்மை பாபாவிடம் கொண்டு வந்து சேர்த்தது என்று திரு.ஸாடே உறுதியாக நம்பினார். திரு.ஸாடே மிகுந்த மனதிடம் வாய்ந்த மனிதர். தன் பிரட்சனைகளை எல்லாம் தீர்த்து வைக்க எனக்கு ஒரு குரு கிடைத்துவிட்டார் என் பதை தீவிரமாக நம்பிய ஸாடே உடனடியாக குரு சரித்திரத்தை பாராயணம் செய்யத்தொடங் கினார்.

ஏழாவதுநாள் பாராயணம் பூர்த்தியானதும் அன்று இரவு



திரு. ஸாடேவின் கனவில் பாபா காட்சியளித்தார். பாபா குரு சரித்திரத்தை தம் கரங்களில் வைத்துக்கொண்டு அதன் உட்பொருளை ஸாடேவிற்கு விளக்கிக் கொண்டிருந்தார். ஸாடே கனவில் இருந்து விழித்து எழுந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் தம்மைப் போன்றவர்களை விழிக்கச்செய்து குரு சரித்திர அமுதத்தை பருக செய்தது பாபாவின் எல்லையற்ற கருணையே என நினைத்தார்.

ஆயினும், குரு சரித்திரத்தை ஒரு வாரம் சப்தாகம் செய்தது போதுமா? அல்லது மீண்டும்

பாராயணம் செய்ய வேண்டுமா? இக்கனவின் பொருள் என்ன என்று குழப்பமடைந்தார். மறுநாள் காகா சாஹேப் தீட்சித்திடம் தனது கனவைக்கூறி சாயிபாபாவிடம் அதன் பொருளை கேட்கும்படி வேண்டிக்கொண்டார்.

காகா சாஹேப்பும் பாபாவிடம் சென்று, விபரத்தைக்கூறி, தேவா இந்த கனவுக் காட்சியின் மூலம் ஸாடேவிற்கு தாங்கள் எதனை குறிப்பிடுகின்றீர்கள் என்பதை கூறுங்கள். திரு.ஸாடே ஓர் எளிய அடியவர் அவரது கனவுக் காட்சிக்கு பொருள் விளக்கி அவரை ஆசீர்வதியுங்கள் பாபா என்று கேட்டுக்கொண்டார். பாபாவும் அவர் மற்றொரு முறை சப்தாகம் செய்ய வேண்டும். இம்முறை அவர் இன்னும் கவனமாக சப்தாகம் செய்தால், அவர் தூயவராகி நன்மை பெறுவார். இறைவன் சம்சார பந்தங்களில் இருந்து அவரை விடுவிப்பார். எனக்கூறினார்.

இச்சமயத்தில் பாபாவால் ஹேமாட்பந்த் என்று அழைக்கப்பட்ட நான் பாபாவின் கால்களை பிடித்து விட்டுக் கொண்டிருந்தேன். பாபாவின் சொற்களைக்கேட்டதும், என்னது? திரு.ஸாடே ஒரு வாரமே குரு சரித்திரத்தை படித்து பாபாவிடம் பரிசை பெற்றுக் கொண்டார். நாற்பது ஆண்டுகளாக நான் குரு சரித்திரத்தை படித்துக் கொண்டிருக்கின்றேன். எனக்கு ஒரு பலனும் கிட்டவில்லையே என்ற எண்ணம் எழுந்தது.

அதுவாவது பரவாயில்லை. திரு. ஸாடே பாபாவிடம் வந்து ஏழு நாட்கள்தான் ஆகின்றது. நான் பாபாவிடம் வந்து ஏழு வருடங்களாகின்றது. ஏழு வருடங்கள் பலனின்றி போய் விட்டதே! பாபா, திரு.ஸாடேயைப் பான்று என்னையும் ஆசீர்வதிக்கக்கூடாதா? உங்களது அமுதத்தையொத்த மொழிகளைக்கூறி என்னை ஆசீர்வதியுங்கள் பாபா. உங்களது கருணை மேகம் என் மீது பொழிய வேண்டும் என்பதற்காக சாதகப் பறவையைப் போல காத்துக் கொண்டிருக்கின்றேன் பாபா என்ற எண்ணம் எனது மனதில் குறுக்கிட்ட அந்த கணமே, பாபாவும் எனது பொறாமை குணத்தை அறிந்துகொண்டார் என்றே நினைக்கின்றேன்.

பாபா தன்னை நாடிவரும் பக்தர்களின் எல்லா எண்ணங்களையும் படித்துப் புரிந்து கொண்டு தீய எண்ணங்களை அடக்கி, நல்ல எண்ணங்களை ஊக்குவித்தார் என்பது அடியவர்களின் அனுபவமாகும்.

அதைப்போலவே எனது எண்ணத்தையும் புரிந்து கொண்ட பாபா, "ஹேமாட் பந்த் நீ உடனே சாமாவிடம் சென்று பதினைந்து ரூபாய் தட்சணை பெற்றுக்கொண்டு, அவருடன் சற்று நேரம் உரையாடி விட்டு பொறுமையாக வா என்றார். என்மீது கருணை இருந்ததனால்தான் பாபா

இக்கட்டளையை இட்டார். இல்லை என்றால் கடுமையாக திட்டியிருப்பார்.

எனவே பாபாவின் ஆணையின்படி அடனே புறப்பட்டு, சாமாவின் வீட்டிற்குச் சென்றேன். அவர் அப்போதுதான் குளித்து விட்டு உடையணிந்து கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும், என்ன ஹேமாட் பந்த இந்நேரத்தில் இங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள். இந்நேரம் நீங்கள் மசூதியில் பாபாவின் அருகில் அல்லவா இருப்பீர்கள். ஏன் உங்கள் முகம் சோர்வுடன் இருப்பதைப் போன்று தோன்றுகிறது! என்னவாயிற்று உங்களுக்கு. சற்று நேரம் திண்ணையில் அமருங்கள். நான் எனது வழிபாட்டை முடித்துவிட்டு வந்து விடுகிறேன் நாம் மகிழ்சியுடன் பேசலாம் என்று உள்ளே சென்றார்.


நான் திண்ணையில் சென்று அமர்ந்து கொண்டேன். வெற்றிலை போடலாம் என்று வெற்றிலைப் பெட்டியை எடுக்கப் போனவன் அருகில் "நாத பாகவதம்" என்ற பிரசித்தி பெற்ற மராத்தி நூலைக் கண்டேன். நான் தொடர்ந்து படிக்கும் நூல்தான் நாத பாகவதம். ஆனால் இன்று காலையில் நான் படிக்க ஆரம்பித்ததும் எனது நண்பர்கள் வந்துவிட்டதால் நான் நாத பாகவதத்தின் அன்றைய அத்தியாயத்தை முழுவதுமாக படிக்காமல் நண்பர்களுடன் மசூதிக்கு வந்துவிட்டேன்.

சாமாவின் வீட்டில் இருந்த அந்த புத்தகத்தை எடுத்து எதார்த்தமாக பிரித்த போது காலையில் நான் படிக்க வேண்டிய பக்கமே வந்தது. என்னை பாபா சாமா வீட்டிற்கு அனுப்பியதன் விளக்கம் எனக்கு அப்போது புரிந்தது. தனது நித்ய பாராயணத்தை முடிக்காமல் வந்ததற்காக என்னை சாமாவின் வீட்டிற்கு அனுப்பி பாராயணத்தை முடிப்பதற்காக பொறுமையாக வா என்று கூறியிருக்கின்றார்.

பாபாவின் கருணையை எண்ணி எனக்கு அழுகையே வந்துவிட்டது. உடனே நாத பாகவதத்தை எடுத்து முடிக்கப்படாத அத்தியாயத்தை உடனடியாக படித்து பூர்த்தி செய்தேன். நான் படித்து முடிக்கவும் சாமா புறப்பட்டு தயாராக வருவதற்கும் சரியாக இருந்தது. வந்த உடனே, இப்போது கூறுங்கள் என்ன விசயம் என்றார்.

பாபா தாங்களிடம் இருந்து பதினைந்து ரூபாய் தட்சிணை வாங்கிக்கொண்டு உங்களிடம் சற்று அமர்ந்து பேசிவிட்டு வரும்படி கூறினார் என்றேன் நான். உடனே சாமா என்னிடம் பணம் சுத்தமாக இல்லை. ரூபாய்களுக்குப் பதிலாக பதினைந்து நமஸ்காரங்களை கொடுக்கின்றேன். பாபாவிடம் கொடுத்துவிடுங்கள் என்றார்.

ரொம்ப நல்லது. உங்களுடைய நமஸ்காரங்களை ஏற்றுக்கொண்டேன். பாபாவிடம் சமர்ப்பித்துவிடுகின்றேன். இபபோது நாம் சற்று பேசலாமா? நமது பாவங்களை அழிக்கும்



பாபாவின் கதைகளையும் லீலைகளையும் எனக்கு கூறுங்களேன் என்று கேட்டேன்.

சாமா, அப்படியா பேஷா கூறுகின்றேன் கேளுங்கள். நம்ம ஆண்டவனின் லீலைகள் அறிந்து கொள்ள இயலாதவை. அவரின் லீலைகளுக்கு முடிவில்லை. ஆனால் யார் அவற்றை புரிந்து கொள்ள முடியும். அவர் லீலைகளினாலே நம்மிடம் விளையாடுகின்றார் என்றாலும், அதனால் ஒருபோதும் பாதிக்கப்படாதவர் போலவே இருக்கின்றார். பாபா, தாமே ஏன் கதைகள் சொல்வதில்லை. தங்களைப்போன்ற கற்றறிந்த வர்களை, என்னைப்போன்ற அறிவிலிகளிடம் ஏன் அனுப்ப வேண்டும்.

அவருடைய லேலைகளுக் குண்டான வழிகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை. இப்போது என் நினைவில் இருக்கும் ஒரு கதையை உங்களுக்கு கூறுகின்றேன். அதை நானே நேரிடையாகக் கண்டேன். ஒரு பக்தன் எவ்வளவு தயாராக இருக்கின்றானோ அவனுக்கு பாபாவின் அனுக்கிரகம் உடன டியாக பலனளிக்கின்றது. தயாராக இல்லாத பக்தர்களை சில சமயம் பாபா சிறிது சோதிப்பதுண்டு. அதன்பின் அவர்களை அருகே அழைத்து அன்போடு " உபதேசம்" செய்வதுண்டு என்றார்.

எனக்கு "உபதேசம்" என்ற வார்த்தையைக் கேட்டவுடன் என் மனதிற்குள் மின்னலைப் போன்ற ஒரு ஒளி பாய்ந்தது. திரு. ஸாடே அவர்களுக்கு பாபா அளித்த ஆசீர்வாதத்தைக் கண்டு நான் பொறாமைப்பட்டதை தவறு என்று சுட்டிக்காட்டவே என்னை சாமா அவர்களின் வீட்டிற்கு சென்று சிறிது நேரம் கழித்துவா என்று அனுப்பியிருக்கின்றார் என்பதை புரிந்து கொண்டேன். இருப்பினும் அதை வெளிக்காட்டாமல் சாமா அவர்கள் கூறும் கதையைக் கேட்க ஆரம்பித்தேன். அந்தக்கதைகளின் மூலம் பாபா தன் பக்தர்களிடம் எவ்வளவு அன்புடனும் பாசத் துடனும் இருக்கின்றார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

சாமா கதையை கூற ஆரம் பித்தார். ராதாபாய் என்ற கிழவி ஒருத்தி இருந்தாள். அவள் காசாபா தேச்முக் என்ப வரின் தாய். பாபாவின் புகழைக் கேள்விப்பட்டு, சங்கம்நேர் நகர மக்களுடன் சீரடிக்கு வந்தாள்.

பாபாவின் தரிசனத்தைப்பெற்று மிகவும் திருப்தி அடைந்த அவள் பாபாவையே குருவாக ஏற்றுக்கொண்டு அவரிடம் இருந்து உபதேசம் பெற வேண்டும் என்று உறுதி ஏற்றுக் கொண்டாள்.

பாபா தன்னை ஏற்றுக்கொண்டு மந்திர உபதேசம் அளிக்காத வரை தான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக உறுதி பூண்டாள். மூன்று நாட் களாக உணவையும், நீரையும் தொடவே யில்லை. கிழவியின் மிகக் கடுமையான விரதத்தைக்கண்டு நான் பயந்து போனேன். அவள் சார்பில் நான் பாபாவிடம் சென்று, தேவா எல்லாவற்றையும் அறிந்துகொண்டும் அறியாதது போல் அமர்ந்திருக்கின்றீர்களே இது நியாயமா?


உங்களின் உபதேசம் கிடைக்காவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக தீர்மானித்து இன்று மூன்றாவது நாளாக பச்சைத் தண்ணீர் கூட குடிக்காமல் இருக்கின்றாள். அவளுக்கு ஏதாவது மோசமாக நடந்து விட்டால், பாபா அவளுக்கு உபதேசிக்கவில்லை. அதனால்தான் அவள் மரணமடைந்தாள் என்றுதானே மக்கள் கூறுவார்கள். எனவே தயவுசெய்து அவளை ஆசீர்வதியுங்கள். என்று கூறினேன். பாபாவும் அவள் மேல் கருணை கொண்டு அவளை கூப்பிட்டு அனுப்பினார்.

உண்ணாவிரதத்தால் சோர்ந்து போயிருந்த அவள் பாபாவின் முன்னால் வந்தமர்ந்தாள் அவளைக் கண்டவுடன் சாயி, “ ஓ அம்மா! தேவையில்லாமல் ஏன் உண்ணாவிரதம் இருந்து உயிரை விடத் துணிகின்றீர்கள்”

நீங்கள் உண்மையிலேயே எனது தாய். நான் உங்களது குழந்தை என் மீது இரக்கம் கொண்டு நான் கூறும் கதைகளை முழுமையாகக் கேளுங்கள். இது எனது சொந்தக்கதை. அதனால் உங்களுக்கு பெருத்த நன்மை விளையும்.

எனக்கு ஒரு குரு இருந்தார். அவர் மிகப்பெரிய முனிவர். மிகவும் கருணையானவர். நான் அவருக்கு பலகாலமாக சேவை செய்து வந்தேன். அவர் என் காதுகளில் எந்த மந்திரத்தையும் ஓதவில்லை. அவரிடமிருந்து சிறிய உபதேசமாவது பெறவேண்டும் என்று எனக்கும் சிறிது ஆர்வம் இருந்தது. ஆனால் அவருக்கு தனித்தன்மையான வேறு வழக்கங்கள் இருந்தது. என் தலையை மொட்டையடிக்கச் செய்து இரண்டு நயா பைசாக்களை தட்சிணையாகக் கேட்டார்.

குரு, தட்சிணையாக பணத் தைக் கேட்டவில்லை என்பதை நானறிவேன். ஏனெனில் குருவின் வருகைக்காக நான் பலவிதங்களில் தயாராக இருந்தேன். ஆகவே அவர் கேட்ட நா– நயங்கள் அதாவது நாவிலிருந்து வரக்கூடிய உறுதிமொழிகளான நம்பிக்கை மற்றும் பொறுமை என்ற இரண்டு பைசாக்களை அவருக்கு



அளித்தேன். அவரும் மனம் மகிழ்ந்து என்னை ஏற்றுக்கொண்டார்.

எனது குருவிடம் எதையும் எதிர்பார்க்காமல் பன்னிரெண்டு ஆண்டுகள் இருந்தேன். அவர் அன்பின் அவதாரம். என்மேல் மிகவும் அன்பாக இருந்தார். உணவுக்கும் உடைக்கும் பஞ் சமில்லாமல் அவர் என்னை வளர்த்தார். அவரைப்போன்ற குருவைக் காண்பது அபூர்வம். நான் அவரை பார்க்கும் போதெல்லாம் தியானத்திலேயே இருந்தார். இரவும், பகலும் பசி தாகத்தை மறந்து நான் அவரையே ஆழ்ந்து பார்த்துக்கொண்டிருப்பேன்.

அவரின்றி என்னால் இருக்க முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டேன். நான் தியானம் செய்வதற்கு அவரின் உருவத்தைத்தவிர வேறு எதுவும் எனக்கு தேவையிருக்க வில்லை. அவருக்கு பணிவிடை செய்வதைத்தவிர எனக்கு வேறு வேலையில்லை. வேறு வேலையையும் நானறியேன். அவரே எனது ஒரே அடைக்கலம். இதுவே பொறுமை என்ற ஒரு பைசா தட்சிணையாகும். என் குரு எனது பொறுமையை மெச்சி கண்டிப்பாக நல்ல கதியை நல்குவார் என்பது இன்னொரு பைசாவாகிய நம்பிக்கை.

எனது குரு என்னிடமிருந்து எப்போதும் வேறெதையும் எதிர்பார்த்ததில்லை. அவர் என்னை ஒருபோதும் புறக் கணித்ததில்லை நான் அவருடனே தங்கி வாழ்ந்தேன். சில நேரங்களில் அவரை விட்டு தள்ளி வாழ்ந்தேன்.

எனினும் அவரது அன்பு அப்படியே இருந்தது. தாய் ஆமை தன் குட்டிகளிடம் இருந்து தள்ளி அக்கரையில் இருந்தாலும், தனது அன்புப் பார்வையிலேயே பேணி வளர்க்கும். அதேபோல் அவர் என்னை வளர்த்தார்.

ஓ அன்னையே! அதைத் தவிர அவர் எனக்கு வேறு எந்தவித மந்திரத்தையும் போதிக்கவில்லை. பின்னர் நான் எப்படி உங்களது காதுகளில் மந்திரத்தை ஓத முடியும். குருவினுடைய அன்பு ஒன்றே நமக்கு அனைத்து நலன்களையும் வழங்கிவிடும். எவரிடம் இருந்தும், மந்திரமோ, உபதேசமோ பெற முயலாதீர்கள். "என்னையே உங்களது எண்ணங்கள், செயல்கள் இவற்றின் ஒரே குறிக்கோளாக அமைத்துக்கொள்ளுங்கள்"


சந்தேகம் ஏதுமின்றி நீங்கள் வாழ்க்கை யின் குறிக்கோளை அடைவீர்கள். என்னை உங்களது முழு இதயத்தோடு அணுகுங்கள். நானும் அவ்விதமே உங்களை அணுகுவேன். இம்மசூதியில் அமர்ந்துகொண்டு நான் உண்மையையே பேசுகின்றேன். உண்மையைத் தவிர வேறெதுவும் பேசவில்லை. நான் கூறும்விதமாக நீங்கள் நடந்துகொண்டால் உடலை வறுத்தி செய்யும் சாதனைகளோ, ஆறு சாத்திரங்களோ உங்களுக்கு தேவையில்லை.

உங்கள் குருவிடத்தில் நம்பிக்கை யும், உறுதியும் கொள்ளுங்கள். குருவே உண்மையில் தெய்வம். குரு மட்டுமே தனித்தன்மையானவர். அவரை பிரம்மம் என்று நம்புபவன் ஆசீர்வதிக்கப்பட்டவன். இவ்வாறாக அறிவுறுத்தப்பட்ட கிழவி பாபாவின் சொற்களுக்கு உடன்பட்டு பாபாவை வணங்கி தனது உண்ணாவிரதத்தை கைவிட்டாள். என்று கூறி கதையை முடித்தார் சாமா.

இக்கதையை கேட்டு முடித்த தும், அதன் கதைக்கும் தனக்கும் உள்ள பொருத்தத்தையும், அதன் நுட்பத்தையும் கண்டு ஆச்சர்யத்தில் முழ்கினேன். இந்தக்கதை எனக்காகவே நிகழ்ந்த கதை போன்று இருந்தது. உண்மை யிலேயே இனி நான் என்ன செய்ய வேண்டும் என்பது சாயி எனக்கு உபதேசிப்பதாகவே இருந்தது. அதை நான் மீண்டும், மீண்டும் நினைத்துப்பார்க்கப் பார்க்க ஆனந்தத்தால் எனக்கு தொண்டை அடைத்துக்கொண்டு என்னால் பேசமுடியவில்லை. என் கண்கள் கண்ணீரை சொரிந்தது.

என் நிலையைக்கண்ட சாமா, ஹேமாட்பந்த் உங்களுக்கு என்ன ஆயிற்று. ஏன் இப்படி உணர்ச்சிவசப்படுகின்றீர்கள் இதற்கே இப்படி என்றால் இன்னும் கணக்கற்ற லீலைகள் இருக்கின்றனவே என்றார். அதே சமயம் மசூதியில் மத்தியான வழி பாடும், ஆரத்தியும் ஆரம்பமாகி விட்டன என்பதை அறிவிக்கும் மணி அடிக்கத் தொடங்கியது. எனவே நானும் சாமாவும் மசூதியை நோக்கி விரைந்தோம்.

தொடரும்.





ஆன்மீக பயணத்தில்
அரும் பெறும் துணையாக
அவன் அளித்த கொடையாக
ஆண்டுகள் (8) பல கடந்தும்
"குருவை தேடி"
வாழ்க வளர்க
வளமுடன் நலமுடன்!

நேசமுடன்,
"**பாராயணப்பகலவன்**"
சுந்தர்சாய்
9789404451 / 9176182498.

தனம் மசாலா

சாம்பார் மசாலா, தனி மிளகாய் பொடி,
மஞ்சள் பொடி, பிரியாணி மசாலா, கரம்
மசாலா மற்றும் தரமான
மசாலா தயாரிப்புகள்.



சுத்தமான, தரமான,
வீட்டுத் தயாரிப்பு, கலருக்கும்,
சுவைக்கும் ரசாயனம்
சேர்க்கப்படவில்லை.

எண்: 96, சரஸ்வதி தோட்டம் முதல் தெரு
குன்றத்தூர், சென்னை- 69. PH: 9080599587.

சலசலக்கும் ஆற்றில்
சருகாய் ஒரு பயணம்!
பாதையெல்லாம் முட்கள் -
தைத்தபோதெல்லாம்
தைலத்தோடு ஓடி வந்த
குருமார்கள்!
பாதாளத்தில் விழுந்தால் கூட
எழுந்து நிற்கும்
ஆன்மீக ஆசிகள்!
முருகன் அருணகிரிக்கு
சொன்னதை ஸ்ரீராமிடம்
சாய்ராம் சொன்னார்
'சும்மாயிரு!'.
அனுமன் போல்
நெஞ்சைப் பிளந்ததொரு
அனுபவம்
குருவைத் தேடி!






நீங்கள் வாழ்வில் வந்தது
நாங்களும்
பாக்கியவான்கள்
என்று பறை சாற்றவே!
நன்றிகள் குருவே!

திரு. அருணாச்சலம் வைத்யநாதன்
அச்சமுண்டு அச்சமுண்டு, நிபுணன்,
பெருச்சாழி, கல்யாண சமையல் சாதம்,
சா பூ திரி, திரைப்பட இயக்குனர்.



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.
"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்



வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!


STAR
Personal & Caring
Health Insurance
The Health Insurance Specialist

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

5 வருடங்கள்
மட்டும்
முதலீடு செய்து
வாழ்நாள் முழுவதும்
உறுதியளிக்கப்பட்ட (Guaranteed)
வருமானம் பெறுங்கள்.
Jeevan Utsav
மேலும் விபரங்களும், முதலீடு செய்யவும் அழைக்கவும்.
G. Gnanamoorthi PH: 8754431069

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் சித்தயோகி ஸ்ரீ வடிவானந்தர் சுவாமிகளின் சீவ பீடத்தை தரிசனம் செய்து அவரின் வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து கொள்வோம்.



– அயனாவரம்
வெங்கடேசன்
9941782523


ஸ்ரீ வடிவானந்தர்

சுவாமிகள், சென்னை தண்டையார் பேட்டையில் 1947 ம் ஆண்டு மார்ச் 27 ம் தேதி வேதாசலம் – ஞானம்பாள் தம்பதியருக்கு மகனாக அவதரித்தார். குழந்தைக்கு வடிவேலு என்று பெயரிட்டு அழைத்தனர். மூன்று வயது இருக்கும் போது அவருடைய தந்தை காலமாகி விட்டார். இதனால் அவருடைய குடும்பம் வறுமையில் தள்ளப்பட்டது. இதன் காரணமாக சுவாமிகள் 7 ம் வகுப்புக்கு மேல் படிக்க முடியவில்லை. அதனால் தன் உறவினர்கள் வாழ்ந்து வந்த சென்னை பெரம்பூர் பகுதிக்கு குடி பெயர்ந்தார்.

குடும்ப சூழ்நிலை காரணமாக சைக்கிள் கடை, டீ கடை வைத்து வியாபாரம் செய்து வாழ்க்கையில் முன்னேறினார்.

இளம் வயதிலேயே பல தொழில் களை கற்றுக் கொண்டு அதை தன் வாழ்க்கைக்கு பயன்படுத்திக் கொண்டார்.

உறவினர்கள் இவருக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்து வசந்தா என்ற



பெண்மணியை 01–2–1971 அன்று திருமணம் செய்து வைத்தனர். சுவாமிகளுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர். முதல் மகள் வளர்மதி, இரண்டாவது மகன் கலைவாணண், மூன்றாவது மகள் மலர்விழி, தன் பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்து அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். வடிவானந்தர் றிஜிசி ல் வேலை பாரத்துக் கொண்டே அச்சகத்தை (Press) நடத்தி வந்தார். இவருக்கு உறுதுணையாக மனைவி, மகள், மகன் இருந்தனர்.



நாளடைவில் இவர் வாழ்ந்து வந்த பகுதியில் நற்காரியங்களை செய்து மக்கள் மனதில் இடம்பிடித்தார். இவருடைய நண்பர் ரோமியோ அவர்களின் மூலமாக பல ஞான குருக்களை சந்தித்தார். சித்தர்கள், மகான்களை தரிசனம் செய்வது இவருடைய ஆத்மார்த்தமான பழக்கம் ஆகும். வாழும் காலத்தில் ஞானகுரு ஸ்ரீ வேதாத்திரி மகரிஷியை குருவாகக் கொண்டு அவரின் கொள்கைகளை பின்பற்றி வந்தார்.

இல்லறத்தில் இருந்து கொண்டே யோகி நிலையை அடைந்த சுவாமிகள் சென்னை கே.கே. நகரில் உள்ள சாமியார் மடத்தில் பேராசிரியர் ரவிசங்கர் குருஜி அவர்களிடம் தீட்சை வாங்கினார். தன்னுடைய வருமானத்தில் பெரும்பங்கை சித்த மருத்துவப் பணிகளுக்கும், ஏழை குடும்பங்களுக்கும் செலவு செய்தார். தீட்சை வாங்கிய பிறகு அவரின் நடத்தை காரணமாக அனைவராலும் வடிவானந்தர் என்று அழைக்கப்பட்டார்.

சென்னையை அடுத்த கும்மிடிப்பூண்டி கவரப்பேட்டை அருகே, தாணிபூண்டி கிராமத்தில் ஆசிரமம் ஒன்று தொடங்கி அதன் மூலம் ஊர் மக்களுக்கு உதவிகளை செய்து வந்தார். மருத்துவ சேவைகளையும் செய்து வந்தார்.

நோய்யுற்றவர்களை தான் கற்ற யோக கலைமூலம் குணமாக்கினார். இவரால் பலன் அடைந்தோர் ஏராளம். இவருடைய சீடர்கள் பல இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். தொடர்ந்து 35 வருடங்களாக ஆசிரமம் நடத்தி வந்தார். ஆசிரமத்தில் ஏழைகளுக்கு தையல் பயிற்சி, வாசி பயிற்சி, தியான பயிற்சிகளை கொடுத்து சித்த யோகியாக மாறினார். தான் சமாதியாகும் காலத்தையும் இடத்தையும் சொல்லி வந்தார். அதன்படியே அவருடைய சமாதி தாணி பூண்டி ஆஸ்ரமத்தில் வைக்கப்பட்டது.

ஒரு முறை பெரம்பூரில் மனவளக்கலை மன்றம் ஆரம்பிக்க இடம் கிடைக்காமல் கடைசியில் தன் வீட்டின் மாடி பகுதியை கொடுத்தார். சித்தர் ஆலயங்களுக்கு சென்று தன் ஞானத்தை வளர்த்து கொண்டார். ஆன்மீக புத்தங்களை விரும்பி படிப்பார்.

பல நற்காரியங்களையும், நற் தொண்டுகளையும், நற் செயல்களையும் செய்து தன்னுடைய 78 வது வயதில் சமாதி நிலையை அடைந்தார். அதாவது சென்னை பெரம்பூரில் 22.5.2025



அன்று சித்தியடைந்தார். இவரின் விருப்பப்படி தாணி பூண்டி ஆசிரமத்தில் 23.5.2025 அன்று சமாதி செய்யப்பட்டது.

இவருடைய ஜீவ சமாதியில் 48 ம் நாள் மண்டல பூஜை 9–7–25 அன்று சித்தரடியார்கள் முன்னிலையில் ஊர் பொதுமக்கள் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது. பிறந்த போது வடிவேலு என்று அழைக்கப் பட்டார். வாழ்ந்தபோது வடிவழகன் என்று அழைக்கப்பட்டார். சித்த யோகியாக மாறின பிறகு வடிவானந்தர் என்று அழைக்கப் படுகிறார்.

இறையருளும், குருவருளும் இருந்தால் சாதாரண மனிதரும் யோகியாக மாறலாம் என்பதற்கு சுவாமி ஸ்ரீ வடிவானந்தர் ஓர் எடுத்துக்காட்டு. வாழும் காலத்தில் தான் நிறுவிய ஆசிரமத்திற்கு "பிரபஞ்ச அமைதி சேவா ஆசிரமம்" என்று பெயரிட்டார். இன்றும் அந்த ஆசிரமத்தை அவரின் குடும்ப உறுப்பினர்கள் திறம்பட நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு இத்தருணத்தில் ஆத்ம நன்றிகளை தெரிவித்து கொள்வோம்.

சீவ ஆலய முகவரி :

பிரபஞ்ச அமைதி சேவா ஆசிரமம், சித்தயோகி ஸ்ரீ வடிவானந்தர் சீவ பீடம், வாழ்க வளமுடன் நகர், தாணிப் பூண்டி கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்.

வழிதடம் பேருந்து மார்க்கம்:

சென்னை கோயம்பேடு – ரெட் ஹில்ஸ்

ரெட் ஹில்ஸ் – கவரப்பேட்டை

கவரப்பேட்டை – சத்திய வேடு

இறங்கும் இடம் – தாணிப் பூண்டி கிராமம்.

இரயில் மார்க்கம் இல்லை.

சித்தர்களை வணங்குவோம், அவர்களின் சீவ பீடங்களை தரிசனம் சொய்வோம், அவர்களின் வரலாற்று குறிப்புகளை அறிந்து கொள்வோம்.

●



"நான் இங்கே என் உடலில் இருக்கலாம், நீங்கள் ஏழு கடல்களுக்கு அப்பால் வெகு தொலைவில் இருக்கலாம். ஆனாலும், நீங்கள் அங்கு என்ன செய்தாலும் எனக்கு உடனடியாகத் தெரியும். நீங்கள் எங்கிருந்தாலும், நம்பிக்கையுடனும் பக்தியுடனும் என் முன் மன்றாடி உங்கள் கைகளை நீட்டும்போது, உங்கள் நம்பிக்கை மற்றும் பக்தி எவ்வளவு உறுதியோ அவ்வளவு உறுதியாக நான் இரவும் பகலும் உங்கள் பின்

கடலில் குதித்த பாபா

னால் நிற்கிறேன்," என்று பாபா சோல்கரிடம் கூறினார் (சாய் சத்சரித்திரம், அத்தியாயம் 15).

பாபாவின் வார்த்தைகள் அன்று போலவே இப்போதும் ஒவ்வொரு பக்தருக்கும் உண்மையாக இருக்கின்றன. பாபா தனது பக்தனை மீட்க ஏழு கடல்களுக்கு அப்பால் சென்ற ஒரு லீலை இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் உலகப் போரின் போது கேப்டன் ஜஹாங்கிர் எஃப். தருவாலா தனது கப்பல் படையுடன் கடலில் இருந்தார். அவருக்கு மிகுந்த ஏமாற்றமளிக்கும் வகையில், அவரது மூன்று கப்பல்களைத் தவிர மற்ற அனைத்தும் எதிரிகளால் தாக்கப்பட்டு வேகமாக மூழ்கிக் கொண்டிருந்ததை கண்டார். விரைவில் தன்னுடைய கப்பலுடன் சேர்த்து மூன்று கப்பல்களும் எதிரிகளால் மூழ்கடிக்கப்படும் என்பதை உணர்ந்தார்.

அதனால் எப்படியாவது மீத முள்ள கப்பல்களைப் பாதுகாப் பான இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று முயற்சித்தார். இருப்பினும் தன் கண்களுக்கு முன்னால் தனது சகாக்களின் கப்பல்கள் கடலுக்குள் மூழ்குவதைக் கண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினார்.

அவர் தனது சட்டைப் பையில் எப்போதும் பாபாவின் புகைப்படத்தை வைத்திருப்பார்.

சட்டென்று பாபாவின் நினைவு வர, அவர் உடனடியாக பாபாவின் படத்தை எடுத்து, சாயி நாங்கள் பெருத்த இக்கட்டில் மாட்டிக்கொண்டுள்ளோம். எதிரிகள் எங்களை சூழ்ந்து விட்டார்கள். எப்படியாவது எங்களைக்



காப்பாற்றுங்கள். உங்களைத்தவிர எங்களுக்கு வேறு கதியில்லை. என பாபாவிடம் மனதார பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் போதே, துவாரகாமாயில் அமர்ந்திருந்த பாபா, "ஹக், ஹக்!" என்று கத்தினார்.

பாபாவைச் சூழ்ந்திருந்த பக்தர்கள், பாபா அமர்ந்திருந்த இடத்திலேயே திடீரென தலை முதல் கால் வரை முழுமையாக நனைந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். அவரின் உடலில் இருந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது, துவாரகாமாயி விரைவில் ஒரு குளமாக மாறியது. சுமார் ஒரு மணி நேரம் பக்தர்கள் துவாரகாமாயிலிருந்து வாளிகளில் தண்ணீரை அள்ளி வெளியே ஊற்றினர். பின்னர் அவர்கள் பாபாவுக்கு அணிந்து கொள்ள உலர்ந்த ஆடைகளைக் கொடுத்தனர்.

பாபா திடீரென உடல் முழுவதும் நனைந்ததற்கான காரணம் குறித்து ஏதும் சொல்லாமல் அமைதியாக இருந்ததால், பக்தர்களில் ஒருவர் அந்த தண்ணீரை கைகளில் அள்ளி தீர்த்தமாக குடித்துப் பார்த்தார். அது மிகவும் உப்பாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்,

இதற்கிடையில், கப்பலில் இருந்து தவறுதலாக கடலில் விழுந்த கேப்டன் தருவாலாவின் தலைமுடியைப் பிடித்து பாபாவே பாதுகாப்பாக இழுத்து கப்பலில் தூக்கிப்போட்டதைக் கண்டார். இந்த சம்பவத்திற்குப் பிறகு மூன்றாவது நாள் மீட்பு நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்து கேப்படன் தருவாலாவிடம் இருந்து ஒரு தந்தி பாபாவிற்கு வந்தது.

சில மாதங்கள் கழித்து கேப்டன் தருவாலா ஷிரிடிக்கு வந்து பாபாவின் காலில் விழுந்து வணங்கினார். தான் பிரார்த்தனை செய்த அடுத்த விநாடியே தனது குழுவினர் மற்றும் பயணிகளின் உயிரைக் காப்பாற்றியதற்காக அவர் பாபாவுக்கு நன்றி தெரிவித்தார்.

கேப்டன் தருவாலா ஒரு தீவிர சாயி பக்தர், அவர் பாபாவின் சேவைகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். பாபா அவரை மிகப் பெரிய தீங்கிலிருந்து காப்பாற்றியமைக்காக ஒரு சிறிய காணிக்கையாக, சபா மண்டபத்தைப் பழுதுபார்ப்பதற் காக இரண்டு தவணைகளில் ரூ. 2,200/- நன்கொடையாக வழங்கினார். ●

சாயி மகராஜ் குருவை தேடி

மாத இதழின் பரிணாம வளர்ச்சி

சாயி மகராஜ் குருவைத்தேடி மாத இதழை நான் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறேன். முதன்முதலில் அப்புத்தகத்தை படிக்கத் தொடங்கிய போது அது சாயி பக்தர்களுக்கு சாயிபாபாவின் குரலாகவும், சாயிபாபாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட போதனைகளை வழங்கும் புத்தகம் என்றும் தோன்றியது.


பெரும்பாலும் புத்தகம் முழுவதுமே சாயிபாபாவின் கருத்துக்கள் அதிகமாக இருந்தாலும், சித்தர்களைப் பற்றிய செய்திகள், மெய்ஞான கட்டுரைகள், உடல் ஆரோக்கியத்தைப் பற்றிய தகவல்கள், மற்றும் திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம் எழுதும் சாயி லீலா, சுந்தர் சாய் எழுதும் திருவருள் தேடி, அதிதேவதை பேன்றவை பல்சுவை உணர்வை கூட்டக் கூடியதாக இருந்தது என்பதில் ஐயமில்லை.



சாயிபாபாவைப் பற்றி பல கோணங்களில் சிந்தனை செய்தாலும் ஒவ்வொரு முறையும் அது வித்தியாசமான ஆத்ம போதனை தரக்கூடியதாகத்தான் இருக்கும். இருப்பினும் இது சாயி மகராஜ் பற்றிய புத்தகம் என்ற எண்ணத்தோடுதான் ஆரம்பத்தில் இப்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தேன்.

கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் நான் குருவை சந்தித்து அவரிடம் தனிப்பட்ட முறையில் பயிற்சி பெறத் தொடங்கிய பின்னர் தான் அவருடைய சிந்தனை, மற்றும் நோக்கம் சாயிபாபாவைப் பற்றியது மட்டுமல்ல, "தன்னையறிதல்" என்ற ஆத்ம ஞானத்தை போதிப்பது தான் என்பதை அறிந்து கொண்டேன். அதனால் அவருக்கு ஆத்ம ஞானத்தை போதனை செய்த தன் சத்குருவான ஸ்ரீ சாயி நாதருக்கு நன்றி செலுத்தும் விதமாகவே இப்பத்திரிகையில் ஸ்ரீ சாயிபாபாவைப் பற்றிய கருத்துக்களை பிரதானமாக பகிர்ந்து கொண்டிருக்கிறார் என்பதையும் அறிந்து கொண்டேன்.

திருமதி. மாதங்கி பாலாஜி



குருவைத்தேடியின் ஆங்கில மொழியாக்கத்தை தற்போதைய அக்கல்கோட் இளவரசரிடம் வழங்குகின்றார் ஸ்ரீமதி. மாதங்கி பாலாஜி

கடந்த 2024 ஆம் ஆண்டு யோகி ஸ்ரீராம் பாபாவின் வாழ்க்கை அனுபவப் புத்தகமான 'குருவைத் தேடி' தமிழ் புத்தகம் வெளியானது அனைவரும் அறிந்த ஒன்று. எல்லோருக்கும் ஏற்படுத்திய உணர்வு போல என்னுள்ளும் இப்புத்தகம் சில மாற்றங்களை உண்டாக்கியது. இது கண்டிப்பாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உந்துதலின் விளைவாக 'In Search Of Guru' என்ற குருவைத்தேடியின் ஆங்கிலப்பதிப்பு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியானது.

மொழிபெயர்ப்பின் போது என்னோடு பயணம் செய்த என் கணவர் பாலாஜிக்கும் குருவுக்கும் அச்சமயத்தில் நெருக்கம் ஏற்பட்டது. கோயம்புத்தூர் சென்ற போது அவர்கள் இருவருக்குள்ளும் நடைபெற்ற உரையாடல்கள் குருவைப்பற்றியும், அவரது செயல் பாடுகளைப்பற்றியும் என் கணவர் நன்கு உணர்ந்து கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.

அதைத்தொடர்ந்து குருவின் அற்புதமான ஆன்மநேயக்கருத் துக்கள் அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற விரிவான எண்ணத்தின் அடிப் படையில் ஆத்மஞானியர்கள் என்ற குழு அமைக்கப்பட்டு அவர்களும் குருவின் சேவைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளத் தொடங் கினர். இப்பணிகளில் நானும் என் கணவரும் குருவுடன் சேர்ந்து பயணிப்பது கூடுதல் மகிழ்ச்சி.

அனைத்திற்கும் முத்தாய்ப்பாக ஆன்லைன் மற்றும் நேரடி வகுப்பு கள் தொடங்கப்பட்டன. குரு, 'மௌனத்தின் மூலம் தவம்' என்னும் தன் பயிற்சி முறையின் மூலம், மன ஆரோக்கியத்தை மேம் படுத்த ஆத்ம ஞான போதனைகள்,

உடல் ஆரோக்கியத்தை மேம் படுத்த 'யோகா ஆசனங்கள்', ஞானத்தை அளிக்கும் 'தியானப் பயிற்சிகள்' மற்றும் வகுப்பின் இறுதியில் மௌனம் மூலம் தீக்ஷை அளித்து அனைவரையும் ஆத்ம ஞானம் என்னும் புதிய பாதையில் பயணிக்க வைக்கத் தொடங்கினார்.

ஆன்மீகத்தின் முதல் வாசல் தெய்வ நம்பிக்கை. அந்த நம்பிக்கை பக்தியாக மலர்ந்து, பின்னர் ஞானத்தை பெற வேண்டும் என்கிற தாகத்தை உண்டாக்கும். ஞானம் பெற வேண்டுமாயின் குருவை அடைய வேண்டும். குரு நமக்கு



தீட்சை அளித்து நம் கவனத்தை உள்முகப்படுத்துவார். அதுவே தியானம் எனப்படும்.

வகுப்பில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் தீட்சை பெற்றுக் கொண்ட பின்னர் தங்கள் வாழ்வில் அபரிமிதமான மாற்றங்களை உணர்ந்தனர். குரு இந்த வகுப்பு மூலம் மட்டுமல்லாமல் சாயி மகராஜ் குருவை தேடி மாத இதழ் மூலமும் தன் ஆத்மஞான கருத்துக்களை விதைப்பதன் மூலம் அனைவரின் சிந்தனையிலும் ஞானம் துளிர்விடத் தொடங்கியது.

ஞானத்தில் உயர்ந்த ஞானம் ஆத்ம ஞானம். தன்னை உணர்ந்த ஒருவன் மகான் ஆகிறான். ஆன்மீக மாத இதழ்களில் ஆத்மஞான போதனைகளை வழங்கி, தன்னை உணரத் தூண்டும் வகையில் மாத இதழ்கள் வெளியாகின்றனவா என்பதை நான் அறியேன்! அதனால் இப்புத்தகத்தை 'Limited Edition' என்று கூறுவது மிகையாகாது. மேலும் இதன் சந்தா கட்டணங்களும் மிகவும் குறைவு என்பதால், நாம் பலரிடம் எளிதில் இப்புத்தகத்தை கொண்டு சேர்க்கலாம். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்கிற நோக்கத்தில் செயல்பட்டால், இச்செயல் நம்மை அறியாமலே நாம் சேர்த்துக் கொள்ளும் நல்வினை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் மேலும் இப்புத்தகம் பலரிடம் சென்று சேர்ந்து, யோகி ஸ்ரீராம் பாபாவின் வழிகாட்டுதலில் ஞான ஒளி திக்கெட்டும் பரவ வேண்டும் என்ற பிரார்த்தனையுடன், 8 வது ஆண்டு விழா மட்டுமல்லாது இப்புத்தகம் நூற்றாண்டு காண வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

குருவே சரணம்!! ●

சிறுநீரகப் பிரச்சனைகளை தீர்க்கும்

மூக்கிரட்டை கீரை



நாம் சர்வ சாதாரணமாக சாலையோரங்களிலும், தரிசு நிலப்பகுதிகளிலும் பரவலாக காணப்படும் ஒருவகை களைச்செடி தான் இந்த மூக்கிரட்டை கீரை. தெருவோரங்களிலும், வயல் களிலும் சாதாரணமாக வளர்ந்து கிடக்கும் இந்த கீரையில் ஏராள மான மருத்துவ குணங்கள் உள்ளன.

இந்த கீரையை உணவில் சேர்த்துக் கொள்ளலாமா என்ற சந்தேகம் பெரும்பாலானோருக்கு உண்டு. ஆனால் நமது முன்னோர் கள் இந்த கீரையை உணவில் சேர்த்து வந்துள்ளதாக தரவுகள் கூறு கின்றன. இக்கீரைக்கு சாரணத்தி, சாரணைக் கொடு, புனர்நவர் எனும் வேறு பெயர்களும் உண்டு. இது கிராமப் புறங்களில் அனைத்து தட்பவெட்ப சூழலையும் ஏற்று நன்கு வளரக்கூடிய ஒருவகை கொடியாகும்.

இந்த கீரையில் அடர்நீல நீற பூக்கள் மற்றும் வெண்மை நிற பூக்கள் காணப்படும். பூக்களின் நிறங் களின் அடிப்படையில் இருவகை மூக்கிரட்டை கீரை உள்ளன. ஆனால் இரண்டுமே பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டு சிறந்து விளங்குகிறது.

மூக்கிரட்டை கீரையின் அறிவியல் பெயர் ஹேவியா டிஃப்பூசா ஆகும்.

இது இந்தியா, இலங்கை, ஐரோப்பா, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில்

காணப்படுகிறது. மேலும் இதனை ஒரு மூலிகைத் தாவரமாக நமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்திருப்பது சிறப்புக்குரியது. மூக்கீரட்டையின் இலை, வேர், தண்டு என அனைத்து பகுதிகளுமே மருத்துவ குணம் கொண்டவை.

மூக்கிரட்டை சிறுநீரகக் கல், பித்தப்பை கல் பிரச்னைக்கு ஒரு சிறந்த தீர்வாக உள்ளது. உடலில் ஏற்படும் வாதம் சம்பந்தமான நோய்களை நீக்க உதவுகிறது. மூளைக்கு ஆற்றலை அழித்து சுறுசுறுப்பாக இயங்க உதவுகிறது. மஞ்சள் காமாலை மற்றும் கல்லீரல் பாதிப்பு கொண்டவர்களுக்கு வயிற்றுப் பகுதியில் நீர் தேங்கி வயிறு பெருத்து காணப்படும் அதற்கு, மூக்கிரட்டையை கீழாநெல்லியுடன் சேர்த்து சாப்பிட்டு வர குணமாகும்.

மூக்கிரட்டையுடன் சீரகம், பெருங்காயம் சேர்த்து கொதிக்க வைத்து குடித்தால், மூட்டு வலி மற்றும் மூட்டுகளில் ஏற்படும் வீக்கம் குறையும். செரிமானக் கோளாறு, மலச்சிக்கல் பிரச்னையை குறைக்க உதவும். சரும நோய்களை குணப்படுத்தி முகப்பொலிவினை மேம்படுத்த உதவும்.

சிறுநீரகம் மற்றும் கல்லீரலில் தேங்கியுள்ள நச்சுக்களை அகற்றி சிறப்புடன் செயல்பட உதவும்.

உடலில் உள்ள தேவையற்ற நச்சுகளை அகற்றியும், கெட்ட கொழுப்புகளை நீக்கியும் உடல் எடையை சீராக வைத்துக் கொள்ளவும் உதவும். இதயம் மற்றும் நுரையீரல் சம்பந்தமான பிரச்னைகளை சரி செய்யவும்



உதவுகிறது. உடலில் ஒவ்வாமை ஏற்படும்போது, அதனால், அரிப்பு உண்டாகும். இந்த பாதிப்பைப் போக்க, மூக்கிரட்டை வேரை இடித்து, ஒரு தம்ளர் நீரில் காய்ச்சி, ஆற வைத்து, அந்த நீரில் சிறிது விளக்கெண்ணை கலந்து தினமும் இரு வேளை பருகி வர, ஒவ்வாமையால் ஏற்பட்ட உடல் அரிப்பு விலகி, சருமத்தில் புதுப்பொலிவு ஏற்படும்.

நோய் எதிர்ப்பு சக்தி இக்கீரையில் நிறைந்து உள்ளதால் தேவையில்லாத ஆக்ஸிஜன்களை உடலிலிருந்து அகற்றுகின்றது. இதன் இலைகள் கண் வீக்கத்தை குறைக்க உதவுகிறது. மலட்டுத்தன்மை போக்க உதவுகிறது.

ரத்த சர்க்கரை அளவினை கட்டுப்படுத்த மூக்கிரட்டை உதவுகிறது. இவ்வாறு பல்வேறு நன்மைகளைக் கொண்ட இக்கீரையை சரியாக இனம்

கண்டு முன்னோர்கள் அல்லது மருத்துவரின் ஆலோசனைப்படி உணவில் சேர்த்துக் கொள்வது நலம் பலன் கிடைக்கும்.

மூக்கிரட்டை கீரையை ஆய்ந்து சுத்தம் செய்து பாசிப்பருப்புடன் சேர்த்து கூட்டாகவோ அல்லது பொரியல் செய்தோ சாப்பிட்டால் உடலில் உள்ள இரத்த அணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கீல்வாதம், இரைப்பு, இதய நோய்கள், மண்ணீரல் வீக்கம், காச நோய் போன்ற வற்றையும் இது கட்டுப்படுத்தும்.

உடல்எடையைகுறைக்கநினைப் பவர்களுக்கு பெஸ்ட் சாய்ஸ் இந்த மூக்கிரட்டை கீரை. மூக்கிரட்டை பொடி என்றே கடைகளில் விற்கிறார்கள். இந்த பொடியை வாங்கி வந்து வெந்நீரில் கலந்து குடித்து வர உடல் எடையை நன்கு கட்டுக்குள் கொண்டு வரலாம்.

வேர்களை காயவைத்து, பொடி செய்து, சுடுநீரில் கலந்து குடித்து வந்தால், கண்கள் சம்பந்தமான நோய்கள் தீர்ந்துவிடும்.

மூக்கிரட்டை கீரையில் ரசம் வைத்து சாப்பிடலாம். இந்த கீரையை நன்றாக சுத்தம் செய்து ஒரு பாத்திரத்தில், 2 டம்ளர் தண்ணீர் விட்டு, அடுப்பில் வைத்து கொதிக்க வைக்க வேண்டும்.கீரை நன்றாக வெந்ததும், தட்டிய பூண்டு பற்கள், சீரகத் தூள், மஞ்சள் தூள், மிளகுத்தூள், உப்புத்தூள் சேர்த்து கொதிக்க விட வேண்டும்.இந்த ரசத்தை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள சிறுநீர் கடுப்பு முதல் சிறுநீரக தொற்று வரை பறந்துவிடும். ●



எதிர்காலம்

உங்களுக்கென்று எதிர்கால வாழ்க்கை இருக்கிறது. ஆன்மீகப் பாதையைத் தேர்ந்தெடுக்க உங்களுக்கு வயது முதிரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சீக்கிரமாகத் தொடங்குங்கள், மெதுவாக ஓட்டுங்கள், பாதுகாப்பாக வந்து சேருங்கள்.

இந்த வயதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மிகவும் அற்பமான விஷயங்களைத் தேடி அலைந்து காலத்தை விரயம் செய்யாதீர்கள். காலம் என்பது மிகவும் மதிப்பு மிக்கது. அதை ஒருமுறை இழந்தோம் என்றால் மீண்டும் அதைப் பெற முடியாது. உங்களது புலன்கள் நல்ல நிலையில் இருக்கும்போதே எதை தெரிந்து கொள்ள வேண்டுமோ அதைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

இப்போதே செயல்படுத்தா விட்டால் உங்கள் வாழ்க்கையில் எப்போதுமே செய்ய முடியாது. ஓ மனிதா! உனது புற அழகையும், இளமையையும், புலன் களின் சக்தியையும் பற்றி வீண் பெருமை கொள்ளாதே. கூடிய சீக்கிரம் நீ முதுமை யடைவாய். உன் தலைமுடி நரைத்துப் போகும். உனது கண் பார்வை மங்கும். கிழக்குரங்கு என உன்பேரக் குழந்தைகளும் கேலி செய்வார்கள். உனது தேகம் வெறும் பொம்மை மட்டுமே. மறைந்திருக்கும் ரகசியத் தைப் புரிந்து கொள்! விழித்துக்கொள்! இப்போதே, இப்பொழுதே இந்த நிமிடமே செயலாற்று! ●



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞ்ஞானம்

உலகிலேயே மிகப்பெரிய கல்வி என்னவென்றால், ஞானத்தை அடையும் மனவளக் கல்வியே! அதன்மூலமே ஒருவன் ஆத்மஞானத்தை அடைய முடியும், ஞானமே கடவுள் அதனை அடைந்தோரே இறைத் தன்மையின் பேராற்றலை பெற்றவர்கள். இறைத்தன்மையின் பேராற்றலானது இயற்கையில் எங்கும் நிறைந்துள்ளது. அதனை சரணடைந்து பாதம் பணிவதே ஆறாம் அறிவாகிய சிறப்பறிவாகும். அதுவே ஞானமார்க்கத்தின் திறவுகோலும் ஆகும், இதனை உணர்ந்தாலே நம்முள் உந்துதல் உருவாகி ஞானமார்க்கத்தில் பயணிக்கத் தொடங்கிவிடுவோம்.

இந்த இயந்திரமயமான காலத்தில் எல்லோராலும் ஞானத்தை அடைய முடியுமா என்றால், நிச்சயமாக முடியும். உடனே மலைப்பான ஒருகேள்வி எழலாம்? ஞானமார்க்கம் என்றால் அனைத்தையும் துறக்கவேண்டுமா? எதையும் துறக்க வேண்டாம், அன்றாட கடமைகளை செய்துகொண்டு, இல்லறம் என்கின்ற நல்லறத்தில் இருந்துகொண்டே, முறையான

தவப்பயிற்சியை மேற் கொள்ள வேண்டும்.



நாராயணன்

தெளிந்த நீரில் தான் ஆழத்தில் உள்ள கற்களையும் காண முடியும், அதுபோல தெளிந்த அறிவினாலே ஞானமடைய முடியும். ஆத்மஞானம் பிரகாச மாக சுடர்விட்டு எரியும்போதுதான் இன்பமான வாழ்க்கை, ஆழந்த அமைதி மற்றும் இறைத் தன்மை கிட்டும்.

பரிசுத்தமான மனதை பெற் றிருப்பதே ஞானம் பெறுவதற்கான முதல் தகுதியாகும். அதற்கு நம்மை பக்குவப் படுத்துவதே தியானப்ப யிற்சி தொடர்ச்சியாக இப்ப யிற்சியை மேற்கொள்வதினால் ஒருவரால் மெய்ஞ்ஞானத்தை அடையமுடியும். அதற்கு, தக்க குருவையடைந்து அவரின் வழி நடத்துதலின் பெயரில் பயிற்சிகளை தொடர்ந்து செய்துவரவேண்டும். குருவின் மூலமாக முதலில் மனம் என்றால் என்ன? அதன் தன்மைதான் யாது? அதனை எப்படி அடக்குவது? என்கின்ற தேடுதலின் வேட்டையை தொடங்க வேண்டும்.

மனம் என்பது ஒருவருடைய எண்ணங்கள், உணர்வுகள், நினைவு கள், கற்பனை போன்றவற்றை உள்ளடக்கிய அந்தக்கரணம் (அகக் கருவி). இது அறிவு, உணர்ச்சி, ஆசை, நம்பிக்கை போன்ற மன நிகழ்வுகளின் தொகுப்பாகும். மனம் என்பது ஒரு நபரின் நனவான செயல்முறைகள் மற்றும் அறியப்படாத செயல் முறைகள் அனைத்தை யும் உள்ளடக்கியது. மனதின் தன்மை யானது நிலையற்றது "மனித மனம் ஒரு குரங்கு", அடக்க நினைத்தால் அடங்க மறுக்கும். மனதினை அறிந்தால் ஒடுங் கும். அதனை அறிவ தற்கான கருவியே தியானம்.

மனமானது இருவகைப்படும் 1.வெளிமனம் 2. உள்மனம். வெளிமனமானது பலவித ஆசாபாசங்களுக்கு இடமாகிறது. அதன் நண்பர்களான இந்திரியங்கள் 1. மெய், 2. வாய், 3. கண், 4. மூக்கு, 5. செவிகளின் துணைகொண்டு பலவித சுகங்களை அனுபவிக்க தூண்டுகின்றது. இந்த ஐந்து இந்திரிய நண்பர்களே வெளிமனதை ஆட்டிவைக்கிறது. இவ்வாறு இந்திரியங்கள் ஆட்டுவிப்பதால் மனிதமனம் பலவித துக்கங்களையும் துயரங்களையுமே சந்திக்க நேரிடுகின்றது.

இந்திரியங்கள் மனதை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வரையில் இந்திரியபோகங்களை அனுபவிக்க மனிதன் முயலு கிறான். தவறான பாதையில் இந்த இந்திரியங்கள் மனதை செலுத்து கின்றது, இதிலிருந்து விடுபட முயற் சிக்கவேண்டும். இப்படி ஐம்புலன் கள் வழியாக வெளிமனமானது அரசாட்சி செய்து மனிதனை நல்லது, கெட்டது, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு என்கின்ற இருமையில் தள்ளுகிறது.

ஆகவே, இந்த வெளிமனம் அடங்கினால் தான் உள்மனமானது திறக்கும். ஐம்புலன்களால் ஆட்டி வைக்கப்படுகின்ற மனதை அடக்குவதற்கான திறவுகோல், மூச்சுப்பயிற்சி, யோகாசனம், தியானம் இவையே வெளிமனதை ஒருநிலைப்படுத்த உதவும் கருவிகளாகும்.

நம் சான்றோர்கள் மனதை அடக்கியாள இருவழிகளை நமக்கு கொடுத்தனர்.

1. தத்துவரீதியாக இது தவறு, தீயஎண்ணம், எதிர்மறை செயல் என்று மனதால் தெளிந்து ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும். அறிவுபூர்வமான சிந்தனையால், ஒவ்வொரு எதிர்மறை எண்ணங்களையும் ஒதுக்கி அறிவால் மனதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

2. மூச்சுக்காற்றை முறைப்படுத்துவது, அதாவது தகுந்த மூச்சுப்பயிற்சிகளின் வாயிலாக அடங்காத மனதை அடக்கியாளுவது. மூச்சு அடங்கினால் மனமானது அடங்கும், மனம் அடங்கும் தருணத்தில் மூச்சு மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. இவ்வாறு ஞானிகளும், சித்தர்களும், யோகிகளும் மனதையும், மூச்சையும் அடக்கி மௌனத்தின் மூலம் அதையே தவமாக்கி மெய்ஞ்ஞானத்தை அடைந்தனர்.

இதில் முதல் வழியானது சற்று கடினமானது. எல்லா மனிதர்களும் அறிவுபூர்வமாக நல்லது கெட்டதை பிரித்துப்பார்த்து ஒதுக்கித்தள்ளும் அளவுக்கு பக்குவப்படவில்லை. ஏனென்றால், மனிதன் ஒரு சமுதாயத்தோடு பிணைக்கப்பட்டு இருக்கின்றான், தினமும் பல்வேறு செயல்களை செய்யும்படிக்கு ஆளாகி சூழ்நிலை கைதியாக வாழுகிறான். இதனால் அவனுக்கு யோசித்து அறிவினால் தெளிவதற்கு நேரமும் போதவில்லை. ஆகவே இந்த தற்கால சூழ்நிலையில் மிக எளிமையான வழியென்றால் மூச்சுப்பயிற்சியின் மூலம் மனதை அடக்குவதே.

உள்மனம் என்பது பேராற்றல் வாய்ந்தது, எதையும் நடத்திக் காட்டக்கூடியது. அதற்கு நல்லது கெட்டது என்பது தெரியாது. வெளிமனம் எதனை சொல்லு



கிறதோ அப்படியே அதை நடத்திக் காட்டக்கூடியது. இந்த உள்மனதாகிய ஆழ்மனதின் அற்புத சக்தியானது வார்த்தைகளால் அளவிட்டுக்கூறமுடியாது.

புரியும்வகையில் சொல்ல வேண்டும் என்றால் வெளிமன எண்ணங்கள், செயல்கள் எஜமானன், உள்மனம் அதனை சிரமேற்கொண்டு செய்யும் சேவகனாகும். அதனால் வெளிமனதை அடங்கச்செய்து நல்ல அதிர்வலைகளையே கட்டளைகளாக நாம் ஆழ்மனதிற்கு வழங்கவேண்டும். அப்படி நல்ல

அதிர்வலைகள் உருவாக வெளி மனம் அமைதியாக வேண்டும், அதற்கு தக்க குருவின் மூலம் நாம் ஞானமார்க்கத்தில் பயணித்து தியானம், யோகம், மௌனம், தவம் போன்ற சாதனங் களை பயில வேண்டும், அதுவே அருமருந்து.

மனமானது வெளிவிவகாரங் களில் ஈடுபடும் வரையில் உள்மனம் அடங்காது. பிரம்மம் என்ற ஒன்றே வேஷங்களை போட்டுகொண்டு தன் மாயாசக்தியினால் இத்தனை படைப்புகளையும், ஏன் நம் எண்ண அலைகளையும் உருவாக்கி இந்த மாயத்தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

இந்த பிரம்மம் தான் உலகமாக தோன்றி பரிமளிக்கின்றது என்று கூறலாமா என்றால், இல்லை, இதனை ஒரு எளிய உவமையால் விளக்கலாம்,

பால்தான் தயிராகமாறி பரிமளிக் கின்றது என்று சொன்னால் அங்கு பால் என்பது இருக்காது, தயிர் மட்டுமே இருக்கும், அப்படித் தானே? ஆம், அப்படியானால் உலகம் மட்டும் தானே இருக்க வேண்டும், ஆனால், பிரம்மம், இந்த உலகம் தோன்றிய பின்பும் இருக் கிறது. அதற்கு முன்பும் இருந்தது.

அதனால், பரப்பிரம்மம் என்கின்ற பரமாத்ம தத்துவம் உலகம் தோன்றியபிறகு போய் விட்டது என்றால் அது மிகப் பெரிய அபத்தமாகிவிடும். அப்படி யானால், இதனை எப்படி புரிந்து கொள்வது? பரமாத்ம தத்துவமாகிய இந்த பிரம்மம் சுத்த, சத்துவ ஞானப் பிழம்பாக எப்போதும் இருந்து கொண்டு, மற்றொரு பக்கம் மாய விமோஹத்தால் இந்த உலகத்தை தோற்றுவித்து, ஜீவன்களாகவும் தோன்றுகின்றார்.

ஒரு நாடகக்கலைஞன் பல வேஷங்களை போட்டுகொண்டு மேடையினில் நடிக்கிறான், அத னால் அவன் உண்மை சொரூபம் மறைத்துவிடுகிறாதா என்ன? இல்லையே. இதே பாணியில் தான் பிரபஞ்சத்தின் தோற்றமும் பரமாத்மதத்துவமாகிய பரபிரம்மத் தின் பலவேஷங்களில் ஒன்று, எத்தனை வேஷங்கள் போட்டாலும் தன்னிலை மாறாமல் பிரம்மம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது. அதை உணர்வதே இந்த மானிடப் பிறவியின் பூரணத்துவம் ஆகும்.

ஆனால், ஜீவாத்மாவாகிய இந்த மானிடப்பிறவி பூரணத்தன்மை இல்லாமல் இருப்பதால் தான் இத்தனை பிரச்சனைகளும். இந்த பூர்ணத்துவமாகிய பிரம்மம் நம்முள் உள்ளது, அதைபோய் எங்கும் வெளியில் தேடவேண்டாம். நம்முள்ளே தேடவேண்டும் அதற்கு வெளிமனதை கட்டுப்படுத்தி குரு ஒருவரின் வழிநடத்துதலினால் தவம் மேற்கொள்ளவேண்டும் (இங்கு தவம் என்றால், ஞான யோகம். "மௌனம் மூலம் தவம்" மௌனம் என்பது வாய்பேசமால் இருப்பது மட்டுமன்று, மனம் முழுமையாக அடங்குதல் என்று பொருள்).

இந்த பூரணத்துவமாகிய ஞானத்தை, நாம் பின்வரும் அத்தியா யங்களில் குரு–சிஷ்ய சம்வாத மாக (அதாவது குரு–சிஷ்ய உரையாட லாக) பார்க்கயிருக்கின்றோம்.

தொடரும்.

பாபா காட்டும் பாதை

ஒருநாள் பிரம்ம ஞானத்தை காட்டும் வகையில் பாபா நீண்ட விளக்கம் ஒன்றை அளித்தார். இதோ அந்த விளக்கம்.

சில பானைகளில் தண்ணீர் நிரப்பி சிவப்பு, மஞ்சள், பச்சை, கருப்பு போன்ற வண்ணப் பொடி களை கலக்கினால் ஒவ்வொரு பானை தண்ணீரும் ஒவ்வொரு விதமான கலரில் காட்சியளிக்கும். பானைகளில் நிரப்பப்பட்ட தண்ணீர் ஒன்றுதான். ஆனால் வண்ணங்கள் கலந்ததால் நிறம் மாறுபடுகின்றன அல்லவா?

அந்த வண்ணங்களை பானை களில் இருந்து நாம் பிரித்து எடுத்து விட்டால் அங்கு வெறும் தண்ணீர்தான் இருக்கும். இப்படிப் பட்டதுதான் ஆத்மா. பானைகளில் இருந்த பல்வேறு வண்ணங்களை உடல்களாக கருத வேண்டும். அதாவது ஆத்மாவும், உடலும் ஒன்று சேரும்போது தான் பல்வேறு வண்ணங்களை போல பல்வேறு உணர்வுகளை கொடுக்கின்றன.

உடம்பில் உள்ள இதயம் மகிழ்ச்சியையும், துன்பத்தையும் வெளிப்படுத்தும்போது ஆத்மா தன்நிலை மாறாமல் அப்படியே இருக்கும். ஆத்மாவை பொறுத்த வரை அதற்கு யாரிடமும் எந்த வித்தியாசமும் கிடையாது. ஒரே நிலையில்தான் எல்லோரது உடம்பிலும் ஒட்டிக்கொண்டு இருக்கிறது. அதுதான் உண்மை யான வடிவம்.

இந்த அடிப்படை தத்துவத்தை முதலில் புரிந்து கொள்ள வேண் டும். இந்த மெய்ஞான உணர்வு ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. ஆனால் ஒவ்வொருவரின் பருவத் துக்கு ஏற்ப அவை மாறுபட்டுகிறது. குறிப்பாக குழந்தை பருவம், இளமை பருவம், திருமண பருவம், உழைக்கும் பருவம், வயதான பருவம், முதுமை பருவம் என்று அவை மாறுபடும்.

இந்த மாறுபட்ட நிலைகளில் நல்ல ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். எதை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். எதை தவிர்க்க வேண்டும் என்பதை உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இந்த புரிதல் இருந்தால் ஆன்மீகத்தில் முக்தியை நோக்கி மனம் செல்லும்.

அதே சமயத்தில் இந்த உணர் வுடன் கலந்தவர்களை ஞானிகள் என்று அழைக்கிறார்கள். இந்த 3 வகையான உணர்வுகள் வேறு வேறு நிலைகளில் இருந்தாலும் ஆத்மா ஒன்றுதான். ஒரு ராஜாங்கத்தில் அரசன், அதிகாரி, போர் வீரர் என்று இருப்பது போல இதை சொல்லலாம். ராஜாங்கத்தை ஆட்சி செய்யும் பொறுப்பு இந்த 3 பேருக்குமே இருக்கிறது. ஆனால் 3 பேரின் இயல்புக்கும், தன்மைக்கும், பொறுப்புக்கும் வித்தியாசம் இருக்கிறது.



அரசன் யானையில் வருவான், அதிகாரி குதிரையில் வருவான், போர் வீரன் நடந்து போவான். அரசன் எதையெல்லாம் நினைக் கிறானோ அதுவெல்லாம் நடக்கும். அதையொட்டிதான் அதிகாரியும், போர் வீரனும் நடந்து கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் அனை வரும் அரசனின் சட்ட திட்டங் களை மதித்து நடந்து கொள்ள வேண்டும்.

ஒருநாள் அரசன் இறந்து விடுவான். ஆனால் அவனால் ஆளப் பட்ட அரசாங்கம் இருக்கும். அரசனின் வாரிசு புதிய பொறுப்பை ஏற்பார். ஆனால் அரசாங் கத்தின் சட்ட திட்டங்கள் மாறாது. அதிகாரி, போர் வீரனின் செயல்பாடுகளும் மாறாது. இதேதான் ஆத்மாவுக்கு பொருந்தும். ஆத்மா வரும்–போகும். ஆனால் அதன் நிலை மாறாது. இதை உணர்ந்தால் தன்நிலையை உணர முடியும். தன்நிலை உணர்ந் தால் பிரம்மத்துடன் ஐக்கிய மாக முடியும். எவருக்கு இந்த அனுபவ மும், பாக்கியமும் கிடைக்கிறதோ அவர் பிரம்ம ஞானம் பெறுகிறார்.

மெய்ஞான உணர்வு பெற்ற வர்களில் ஒருவருக்கு அதிக பலனும், சிலருக்கு குறைவான பலனும் கிடைக்கலாம். மனிதர்கள் தங்க ளுடைய அறிவுக்கும், பக்குவத் துக்கும் ஏற்ப அடைந்திருக்கும் தகுதியை வைத்தே மெய்ஞான உணர்வு வேறுபடுகின்றது. மெய்ஞான உணர்வும், மாயையும் இணைந்தே இருக்கும். அப்படி இணைந்ததுதான் இந்த உலகம்.

இந்த உலகம் மாயையால் சூழப்பட்டு இருக்கிறது. மெய்ஞான உணர்வில் இருந்து மாயையை பிரிக்க இயலாது. என்றாலும் மாயைக்கு ஒருநாள் முடிவு உண்டு. ஆனால் பிரம்மத்தின் மெய்ஞான உணர்வுக்கு என்றுமே முடிவு கிடையாது. மெய்ஞான உணர்வு அழிவற்றது. அது தொடர்ந்து என்றென்றும் இருந்து கொண்டே இருக்கும். அதன் ரகசியங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்களை நீங்களே புரிந்து கொண்ட பிறகு அந்த நிலையை பேரின்ப நிலையாக மாற்ற வேண்டும். அந்த பேரின்ப நிலையை ஒவ்வொரு நாளும் அனுபவிக்க வேண்டும். எந்த காரணத்தை கொண்டும் மீண்டும் மாயை வலையில் சிக்கி அறியாமைக்குள் வீழ்ந்து விடக்கூடாது.

மாயை மிகவும் மோசமானது. அதை நீங்கள் சாதாரணமாக நினைக்காதீர்கள். அது கடலை விட ஆழமானது. வானத்தை விட அளவற்றது. அதை அளவிடுவது கடினமானது. நான் என்ற உணர்வு மாயையால்தான் நமக்கு வருகிறது. மாயை நமக்குள் புகுந்து கொண்டால் நமக்கு உண்மைகளை புரிந்து கொள்ளும் சக்தி குறைந்து விடும்.

உண்மையையும், நம் உலகையும் மாயை முழுமையாக நம்மிடம் இருந்து மறைத்து விடும். மாயையிடம் மேற்கண்ட 2 குணங்களும் மிக அதிகமாக உண்டு. மாயை நம்மிடம் அதிகமானால் பொய்மையை அதிகரிக்க செய்யும். வெளி தோற்றத்தில் நாம் ஏமாற மாயை வழிவகுத்து விடும். இந்த நிலை அதிகமானால் ஒரு கட்டத்தில் மாயை நம் ஞானத்தையே முற்றிலும் கட்டுப்படுத்தி அழித்து சூனியம் ஆக்கி விடும். எனவே மாயையிடம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் மாயையால் ஏமாற்றப்படுகிறார்கள். ஒவ்வொருவரிடமும் அவர்களை சுற்றி மாயத் திரை இருந்து கொண்டே இருக்கும். மாயத் திரை சூழ்ந்து இருந்தால் உண்மையான தன்மை எடுபடாது. பிரம்மம் என்னும் உண்மையை உணர முடியாமலேயே தவிப்பான நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவார்கள்.

இப்படிப்பட்ட சூழ் நிலையைதான் மக்கள் மத்தியில் மாயை உண்டாக்குகிறது.

அதாவது ஒருவனது புத்தியில் உண்மை நிலையை மறைத்து பொய்யான ஒரு தோற்றத்தை மாயை மிக எளிதாக ஏற்படுத்தி விடுகிறது. அந்த பொய் தோற்றம் அதிகமாகும் போது பிரம்ம ஞானமே நினைவுக்கு வராது. மாயைக்கு அடிமையாகி விட்டால் அந்த பழக்கமே அவனுக்கு நிரந்தரமாகி விடும். பிறகு அதிலிருந்து மீள்வது கஷ்டம்.

இப்படிப்பட்ட மாயை ஏற்படுத்தும் மர்ம திரையில் இருந்து என் பக்தர்கள் ஒவ்வொருவரும் விலகி வரவேண்டும். பிரம்மத்தை உணர வேண்டும். பிரம்ம ஞானத்தை பெற வேண்டும். அந்த ஞானம் வரவேண்டுமானால் மாயை இல்லாத மெய்ஞான உணர்வு தலைதூக்க வேண்டும். மெய்ஞான உணர்வு உங்கள் ஒவ்வொருவரிடமும் அதிகமானால் மட்டும் தான் உண்மை நிலையை தெரிந்து கொள்வீர்கள்.

உண்மை புரியும் போது நாம்தான் இந்த உலகம் என்ற உணர்வு உங்களுக்கு தெரிந்து விடும். மாயையை எவ்வளவு சீக்கிரமாக விரட்ட முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக விரட்டுங்கள். தண்ணீரில் உள்ள அழுக்கை போக்கினால் தான் நல்ல சுத்தமான தண்ணீர் கிடைக்கும். அதுபோல மெய்ஞான உணர்வால் மாயை என்னும் மன அழுக்கை, குப்பைகளை போக்குங்கள்.

அந்த மன குப்பை அழுக்குகள் போக்கப் படும் போது மாயை மனதுக்குள் இருக்காது. மனம் வெறுமை ஆகும். அப்போது நாம் யார் என்ற உண்மையை அறிந்து புரிந்து கொள்ள முடியும்.

இப்போது உங்களுக்கு மாயைக்கும், ஆத்மாவுக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்திருக்கும். ஆத்மாவே உண்மையானது.

நான் உங்களுக்கு காட்டும் பாதையும் இதுதான். பிரம்ம ஞானத்தை அடைய வேண்டுமானால் முதலில் ஆத்மாவை புரிந்து கொண்டு அதை உணருங்கள். ஆத்மாவை பற்றி நிறைய சிந்தித்துப் பாருங்கள். அதை சிந்திக்கும் போது உங்களுக்குள் நிச்சயம் மாற்றம் வரும். ஆத்மாவை நினைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். ஆத்மா எவ்வளவு புனிதமானது என்பதை நினைத்து பார்த்து பக்குவம் அடைவீர்கள்.

ஆத்மாதான் அனைத்துக்கும் அடித்தளம். உங்கள் ஆத்மாவை நீங்கள் நிச்சயம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆத்மாவின் மகத்துவம் அளவிட முடியாதது. ஆத்மாவை தெரிந்து கொள்ளாமல் நிச்சயம் உங்களால் பரமாத்மாவை தெரிந்து கொள்ளவே முடியாது.

ஆத்மா பலம் பெற வேண்டும். அதற்கு ஞானத்தை பெற வேண்டும். மெய்ஞான உணர்வுடன் ஆத்மா பலம் பெறுமானால் இந்த உலகத்தில் முடியாதது எதுவுமே இல்லை. எனவே மெய்ஞான உணர்வை நமக்குள் ஏற்படுத்தும் கருத்துக்களை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளுங்கள். மெய்ஞான உணர்வு பெற பெற அறியாமை நீங்கும். நான் யார் என்பது விளங்கும். நான் ஆத்மா என்பதை அறிந்து கொண்டபின், பிரம்ம ஞானத்தை எளிதில் தெரிந்து கொள்வீர்கள். நான் காட்டிய இந்த பாதையை ஒரு போதும் மறக்காதீர்கள். இவ்வாறு பாபா பக்தர்களுக்கு விளக்கம் அளித்தார். ●

இயக்கம்



கண்ணிற்குப் புலப்படாத ஆத்மா தான் உடலை இயக்குகிறது. ஆனால் நான் ஆன்மா என்பதை மறந்து உடலே நான் என தேகத்தையே பெரிதென நினைக்கிறார்கள். இந்த உடலைச் சேர்ந்தவை எல்லாம் அதாவது பெயர், தொழில், கல்வி எல்லாம் தற்காலிகமானவை.

சத்தியம் என்பதே உண்மை. நீ ஆத்மா! நிரந்தரமானவன்! ஆகவே தேகத்தின் மேல் வைத்துள்ள பற்றுதலை நீக்கி, ஆத்மாவின் விழிப்புணர்வோடு வாழுங்கள். தேகமே பெரியதென எண்ணி வாழ்பவர்கள் ஆத்மாவைப் பற்றிய ஞானத்தைப் பெற இயலாது. புனித நூல்களில் இருந்து உதாரணம் காட்டிப் பேசக் கூடியவராக இருந்தாலும், அது அவரது புத்தக அறிவைத்தான் காட்டுகிறதே தவிர, ஆத்மாவிடம் அழைத்துச் செல்ல அந்த அறிவு உதவாது.

நீ ஆத்மா. அதுவே அனைத்து சக்திகளுக்கும் ஊற்றுக்கண். ஆத்மாவின் சக்தியை புரிந்து கொள்ள வேண்டும் என்றால், முதலில் மனதின் இயல்பைப் பற்றி விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுது ஒரு மனிதன், தன்னுடைய துன்பங்களில் கடவுளுடைய பங்கு இல்லை என்றும், அவனது இயக்கத்திற்கு "அவனே செய்பவன், அவனே அனுபவிப்பவன்" என்பதையும் உணர்ந்து கொள்வான்.

வாசகர் குரல்...

படித்ததும் கண்கள் கலங்கின

நான் நீண்ட நாட்களாக பாபாவின் பக்தை. இதுவரை சீரடி செல்ல வாய்ப்பு கிடைக்கவில்லை. இம்மாத இதழில் வெளிவந்த 14 வது சீரடி புனித யாத்திரை என் மனக்குறையை சற்றே தீர்த்து வைத்தது. அடுத்தமுறை அவசியம் நானும் கலந்து கொள்ள வேண்டும் என்று சாயிநாதரிடம் பிரார்த்திக்கின்றேன் சாய்ராம்.


– திருமதி. கனகவல்லி, விழுப்புரம்.

ஆசிரியரும் எனது ஞான குருவுமான யோகி ஸ்ரீராம் பாளாவிற்கு என்று பனிவான நமஸ்காரங்கள். அமுத மொழி என் ஆத்மாவிற்கு அமைதியை தந்தது.14 வயு சீரடி புனித யாத்திரை மிக அனுமையாக இருந்தது. அகஸ்டின் அவர்களுக்கு வாழ்த்துக்கள். மௌன குரு தட்சிணாமூர்த்தியை வணங்குகின்றேன். எங்கும் நிறைந்தவர் பெட்டிச்செய்தியை படித்ததும் கண்கள் கலங்கின. குரு வாழ்க! குருவே துணை!

– திருமதி.இந்துமதி, அயனாவரம்.

வணக்கம் ஆசிரியர் அவர்களே!

திருவருள் தேடி சென்ற இதழில் வந்த கட்டுரையே இம்மாதத்திலும் வெளியிட்டிருக்கின்றீர்கள். ஏன் இந்த கவனக்குறைவு. 83 புத்தகத்திலும் நடக்காதது 84 வது புத்தகத்தில் நடந்திருக்கின்றது. யாரோ திருஷ்டி



வைத்திருக்கின்றார்கள். சுற்றிப் போடுங்கள்.

– திரு. சந்திர சேகர், பெரியகுளம்.

அன்புள்ள ஆசிரியருக்கு, இம்மாத சாய்சரிதத்தில் பல்லியின் கதை எழுதியிருந்தீர்கள். அதில் பல்லியின் சப்தம் நல்ல சகுணமா? கெட்ட சகுணமா? என்ற கேள்விக்கு பாபா உனது செய்கை பல்லிக்கு நல்ல சகுணம், கெட்ட சகுணம் ஆகுமா? பல்லியின் செய்கை உன்னை எப்படி பாதிக்கும். முட்டாள்தனமாக சிந்திக்காதே

என்ற பதில் என்னை சிந்திக்க வைத்தது. எல்லாம் அறிந்த மகான் தன் சீடர்கள் மூட நம்பிக்கை இல்லாது மெய்யான ஞானத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் விரும்புவார்கள். அந்த சிந்தனையில் தாங்கள் எழுதியிருந்தது என்னை ஆழமாக சிந்திக்க வைத்தது. மிகவும் அருமை அய்யா.

– திரு. முரளிதரன்,
கும்பகோணம்.

அமுத மொழியும், ஆசிரியரின் இனிய மொழியும் புத்தகமாக வெளிவந்தால் நிறைய நபர்களுக்கு பயன்படும் என்பது எனது தாழ்மையான கருத்து. முடவாட்டுக்கால் கிழங்கு பற்றிய செய்திகள் பயனுள்ளதாய் இருந்தது. திருவருள்தேடி சென்ற மாதம் வெளிவந்த கதையே இம்மாதமும் வெளிவந்திருக்கின்றது.

– செல்வி. பானுமதி,
திருமுல்லைவாயில்.

தென்முகக்கடவுளான ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் அற்புதமான ஸ்தோத்திரம் இருக்கும்போது நாம் ஏன் வடநாட்டில் இருந்து குருபரம் பரையை இறக்குமதி செய்கின்றோம் என்பது புரியவில்லை. இதில் ஏதோ இனவாதம் இருப்பதுபோல் தோன்றுகின்றது. எது எப்படி இருப்பினும் தாங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல, பழையதை மறக்காமல் இருந்தால் எல்லாம் நலமாக இருக்கும்.

– திரு. லெட்சுமணன், தஞ்சாவூர்.

அமுதமொழி சிறப்பு, சீரடிப் பயணம் அருமை. வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம் மிகச்சிற்பாக செல்கின்றது ஆசிரியர் நாராயணன் அவர்களுக்கு வாழ்த்துகள். ஆத்மஞானிகள், எங்கும் நிறைந்தவர், எதிர்காலம் மூன்று பெட்டிச்செய்திகளும் முக்கனியைப் போல் இனித்தது.

– திருமதி. லட்சுமி, நாகர்கோவில்.

சத்சரிதம் படிக்க எளிதாகவும், நன்றாகவும் புரிகின்றது.சரளமான எழுத்து நடை சிறப்பாக இருக்கின்றது. சிவவாக்கியருக்கு சீவபீடம் சென்னையிலா, புதிய தகவலாகவும் இருக்கின்றது. நம்பமுடியாததாகவும் இருக்கின்றது. எதற்கும் ஒரு முறை நேரில் சென்று பார்த்துவிட்டு வந்துவிடுகின்றேன்.

– திரு. காளிதாசன், மகாபலிபுரம்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.2000.

திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.

சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.

திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி, ரூ. 500.

திருமதி. அனுராதா கிருஷ்ணமூர்த்தி, பெங்களூர். ரூ.500.

சி. கே. மாலினி, கோயம்புத்தூர். ரூ.500.

வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திரு. பாபு லதா, வேப்பம்பட்டு, ரூ.500.

திருமதி.நித்யா, கூடுவாஞ்சேரி. ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி.மகாலட்சுமி முருகன். மதுரை. ரூ.500.

திரு. வெங்கடாசலம் டி.நகர். ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.

திருமதி. இந்திரா வெங்கட்ராமன். பெங்களூர். ரூ.200.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.

திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100

திரு. கோபால்சாய், விருகம்பாக்கம்.ரூ.100

திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ.1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 320 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 850 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா – ரூ.1,400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு.3,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. கணேசன், சென்னை. ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி, ரூ. 500.

திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரவள்ளூர். ரூ.200.

திரு. கோபால் சாய்,விருகம்பாக்கம். ரூ.100.

திரு.வேணுகோபால், நங்கநல்லூர்.100.

திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர் ரூ.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவித தமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068